பாலர் கல்வி

தொகுதி 6	1941 ௵ ஆகஸ்டு ௴ விஷு ௵ ஆவணி ௴	பகுதி 5

குழந்தையின் பாஷை வளர்ச்சி

S. ஜகந்நாதன், டீசர்ஸ்காலேஜ், சைதாப்பேட்டை.

குழலினிது யாழினி தென்பர் தம்மக்கள்
மழலைச் சொற் கேளா தவர்.

பாஷையும் பகுத்தறிவுமே மானிட ஜன்மத்தின் உயர்வுக்குக் காரணம் ஆகும். அவை கடவுளால் வேண்டுமென்று கொடுக்கப்பட்ட அபூர்வ சக்திகள் ஆகும். குழந்தைகளிடம் இப்பாஷை சக்தி வெகுசீக்கிரமே காணப்படுகின்றன. தமது உள்கருத்துக்களை பேச்சுமூலமாகக் காட்டுவதே பாஷை ஆகும். இந்தப் பேச்சு சப்தஸ்வரூபம். இப்பேச்சுக்கு முன்பே அழுகை, சிரிப்பு, முகஜாடை, கைஜாடை, தலை ஆட்டுதல் இவை போன்ற சேஷ்டைகளும் குழந்தையின் பாஷையே ஆகும்.

செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வ மச்செல்வஞ்
செல்வத்து ளெல்லாந் தலை.

பெற்றோருடைய பிரியமான பேச்சைக்கேட்டல், கண்ணால் பார்த்தல், வஸ்துக்களுடன் பழகுதல், விளையாடுதல் இவை பாஷாஞானத்திற்கு அஸ்திவாரம் ஆகும். இவை இயல்பாக அமைந்த அம்சங்கள் ஆகும். வஸ்துக்களின் பெயரைக்கேட்டு அறிதல், திடீர் திடீர் என்று சமயம் வாய்ந்தபொழுது கேட்ட சப்தத்தை வெளிக் கொணர்தல், திரும்பத் திரும்பச் சொல்லித் தாமே களித்தல், இவ்வாறு பாஷையும் ஞாபகசக்தியும் ஊன்றிவிடுகிறது. பேச்சில் பழக்கம் கொடுப்பதில் அவகாசம் கொடுக்கக் கொடுக்கப் பேச்சு அபிவிருத்தியடைகிறது. சப்தம், வார்த்தை, வார்த்தைத் தொடர், வாக்கியம் இவ்வாறு பேச்சும் படிப்படியே விருத்தியடைகிறது. இம்மாதிரி விருத்தியடைய உள்ளிருக்கும் எண்ணங்களை நன்று வெளிக்காட்ட முடிகிறது.

நல்லபேச்சு வினயத்திற்குக் காரணம். வினயத்திலிருந்து யோக்கியதை உண்டாகிறது. யோக்கியதையிலிருந்து தனம் சம்பாதிக்கிறான். தனத்தைக்கொண்டு தர்மம் செய்து தானும் பெருமையடைகிறான். ஆக நல்ல பாஷையே நல்ல வித்தைக்கும் அஸ்திவாரம் ஆகும். உபாத்தியாயர்கள் பாஷைப்பாகத்தின் மூன்று பிரிவுகளாகிய பேச்சு, வாசிப்பு, எழுத்து என்பவைகளுள் முதற்பிரிவாகிய பேச்சுப்பழக்கத்தையே ஆரம்பவகுப்பில் அதிகமாய்க் கவனிக்கவேண்டும். கடைசியில் சொல்லப்பட்ட எழுத்துப் பழக்கமதான்முதலில் கொடுப்பது அறிவீனமாகும். அதன் பொருட்டே நாளாக நாளாக பாஷாபிவிருத்தி ஏற்பட்டுக் கொண்டே போகும் விஷயத்தைப்பற்றி வயதுப்பிரகாரம் இங்கு ஒரு அட்டவணை கொடுக்கப்பட்டிருக்கிறது.

ஒரு வயது பத்துமாதக் குழந்தையின் பாஷை

உறவினர்கள் பெயர்

அம்மா	பாப்பா	அண்ணு	பாட்டி	அத்தை
அப்பா	அக்கா	தாத்தா	சித்தி	

உறுப்புக்களின் பெயர்

கை	மயிர்	மூஞ்சி	கால்	மூக்கு
கால்	ஆ	தொப்பை	காது	

ஆகாரப் பொருள்களின் பெயர்

மம்மு	பிச்சுக்கோ	தூத்தா	கஜ்ஜை	மாம்பா
கக்கு	ஒடின்	எண்ணே	கக்கா	அப்பயா
அப்பிச்சி	காபி	நே	பால்	
பப்பிட்டு	தச்சி	அச்சி	கோம்	

வஸ்துக்களின் பெயர்

மணி	நாய்	காசு	கிட்ட		கொக்கொகோ
ரயி	வாச	பொட்டி	ஆத்து		வாவா
ஆவ்	பூச்சி	டண்டா	அத்தாத்து		நன்ன.
ஆப்பு	சோயி	ஜூட்	மண்	காக்கா	துண்ணி
குய்வி	பாய்	ஊ	மொத்தை	ஆய்	மயை

செய்கையைக் காட்டும் சொற்கள்

வா	வாணும்	தா	ஆச்சு	அடி	
போ	மாட்டேன்	தாக்கும்	இத்து	தாச்சு	ஊட்டு.

இதர சொற்கள்

இதோ	ஏக்கு	ஆனே	பாக்கு	நூல்	
அங்கே	பிர்பிர்	எம்பு	படாசு	சாயி	
நா	பிச்சக்கா	குச்சி	ஒலே	இல்லு	பூத்து

2+வயதுக் குழந்தையின் சொற்கள்

உறவினர்கள் பெயர்

அம்மா	அப்பா	அண்ணு	மாமா	தாத்தா
பாட்டி	பாப்பா	கோந்தை		

உறுப்புகளின் பெயர்

கை	கால்	தலே	மூக்கு	கண்
காது	தொந்தி	நெத்தி	பல்	வாய்
ஆவு	தோதோ	காகா	மாடு	ஆனே
ஆட்டுக்குட்டி	கழுதை	கொக்கொகோ	குருவி	எலி

ஆகாரப் பொருள்களின் பெயர்

மம்மு	தூதா	மாட்டேன்	கக்கு
தச்சி	வெந்நீதூதா	தட்டு	எண்ணெ
பப்பு	அப்பிச்சி	முந்திரி	காபி
தோசை	முழுசா	இலே	பால்
பருப்புப்பொடி	ஆப்பயம்	மாம்பழம்	கோகோ
கோம்பு	மோர்	இன்னும்ஒன்னு	கலூலு
கக்காய் (கரி)	அப்பளாம்	தேங்கா	பிசுகோகு
நெய்	வேணும்	பி	ப்ட்டாணி
ஊவா	வாணும்	ஆய்	சாந்து
குடை	துணி	சட்டை	குங்கு
பாவாடை	மணி	பொம்மை	காப்பு
சங்கிலி	பூ	குல்லா	வளே

செய்கையைக் காட்டும் சொற்கள்

காணும்	இதோ	அங்கே	இங்கே	படக்	
போட்டுக்கோ	தாச்சு	குடுகுடு	வாவா	தின்னு	
சாப்பிடு	குடி	கடி (கச்சு)	அடி	நில்லு	
குத்து	தெற	மூடு	தூங்கு	ஒதை	
போச்சு	தொடு	இத்துக்கோ	பானு (ரு)	புச்சு	
நந்து	வை	வச்சு	கொட்டி	வாங்கி	
போடு(குத்து)	பொறுக்கி	பிச்சு	ஏத்தி	இறக்கி	கிழி

வஸ்துக்களின் பெயர்

பந்து	மண்ணு	மடி	மெத்தை	பை
பட்டு	கொல்லே	பாம்பு	வெத்தெ	குலுப்பை
சொப்பு	ஊவா	பூச்சி	வாவா	ஆணி
தம்பிடி	சாவி	கண்ணாடி	பாய்	ஓட்டை

காசு	வாசல்	நீ	சாணி	பல்லி
தண்ணி	மோட்டார்	விச்சி	ரயில்	வால்
கல்லு	சண்டை	பாக்கு	கடை	சாக்கடை

இதரசொற்கள்

ஜோக்கா	நல்லது	ஞாய்	சேப்பு	எல்லாம்
மொட்டை	அழுக்கு	மஞ்சள்	கறுப்பு	எல்லார்க்கும்.
பொல்லாது	சொய்சொய்	பச்சை	அள்ளி	

குழந்தையின் ஒவ்வொரு சொல்லும் ஒரே அர்த்தத்தை உடையது. அர்த்தமில்லாத சொல் அதனிடம் கிடையாது. ஆகவே நாமும் அர்த்தமுள்ள பாஷையையே அதனிடம் பேசவேண்டும். நம்முடன் கூடியிருக்கும்பொழுது நாம் மற்றவருடன் பேசினாலும் அர்த்தமுள்ள பாஷையையே பேச வேண்டும். உட்கருத்தை வெளியிட பாஷை ஒரு சிறந்த சாதனம். உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுவது பாஷையின் இயல்பிற்கு நேர் விரோதம் ஆகும். குழந்தைகளுக்காக வென்றே நாம் நமது நடவடிக்கைகளை மாற்றிக்கொள்ள நேரிடுகிறது. குழந்தைகளின் பேச்சு காதுக்கு இன்பமான மழலைச் சொல்லாகும். ஆயினும் நாளடைவில் அவற்றைத் திருத்துவது நமது பொறுப்பே ஆகும்.

5+வயதுக் குழந்தையின் சொற்கள்

குழந்தை வாசிக்கத் தொடங்குகையில் இங்கு காண்பித்திருக்கிற பழக்க முள்ளவும், படித்தவுடன் பொருளை எளிதில் அறிந்து கொள்ளக் கூடிய வார்த்தைகளைக் கற்றுக்கொடுப்பதே சாலச் சிறந்ததாகும்.

அரிச்சுவடி புத்தகத்திற்கும் அரும் பதவுரை அகராதி எழுதும் படியான பரிதாபகரமான நிலைமையாயிருந்திருக்கிறது. குழந்தைகளின் பேச்சைக் கணக்கிட்டு முதல் வாசக பாடங்களை நடத்துவது சிலாக்கியம். பாலர் வகுப்புப் பாஷை வாசிப்பு பாடங்களுக்கு இந்த அட்டவணை தயார் செய்வது மிக்க உபயோகமுள்ளதாயிருக்கும்.

உறவினர்கள் பெயர்.

அம்மா	அத்தை	அக்கா	தங்கை	அத்திம்பேர்
அப்பா	மாமா	குழந்தை	பாட்டி	பாபா
தாத்தா	அண்ணா	தம்பி	அத்தான்	

உறுப்புகளின் பெயர்

தலை	காது	கழுத்து	மயிர்	முழங்கால்
கண்	நாக்கு	கால்	உதடு	நெற்றி

கை	வாய்	விரல்	முதுகு	தோள்	மீசை
மூக்கு	பல்	வயிறு	முழங்கை	தாடி	கன்னம்

ஆகாரப் பொருளின் பெயர்.

சாதம்	நெய்	தோசை	அப்பளம்	காப்பி
கறி	தயிர்	மிட்டாய்	பொரி	சுண்டல்
குழம்பு	பால்	இட்டிலி	அடை	பிட்டு
ரஸம்	வெண்ணெய்	லட்டு	ஊறுகாய்	வெற்றிலை
பருப்பு	முறுக்கு	ஜிலேபி	உப்புமா	பாக்கு
மோர்	வடை	பாயஸம்	கொழுக்கட்டை	

உடுப்பு வகைகள்.

சட்டை	புடவை	தலையணை	பின்னல்	பழையது	
குல்லா	பாவாடை	குங்குமம்	பவழமாலை	பம்பரம்	
பட்டு	துண்டு	சாந்து	மை	காற்றாடி	
காப்பு	கம்பளி	விபூதி	தங்கம்	தம்பட்டம்	
கடுக்கன்	பாய்	சீப்பு	வெள்ளி	ஊதல்	
மோதிரம்	குடை	கண்ணாடி	அழுக்கு	பொம்மை	
செருப்பு	சங்கிலி	புதியது	கோலி	வளை	பந்து

வீடும், வீட்டுச்சாமான்களும்.

வீடு	பூட்டு	இயந்திரம்	நாற்காலி	பொம்மை	
கதவு	சாவி	கல்	கட்டில்	பென்ஸில்	
ஜன்னல்	அம்மி	மணல்	படம்	பேனா	
திண்ணை	குழவி	சுண்ணாம்பு	விளக்கு	கொசுவலை	
தூண்	உரல்	முற்றம்	திரி	கிலுகிலுப்பை	
ஓடு	உலக்கை	கூடை	விசிறி	கத்தி	
வாசல்	கூடம்	முறம்	தொட்டி	புட்டி	
சுவர்	தாழ்வாரம்	அரிவாள்	பெட்டி	ஊசி	
துளசிமடம்	தட்டி	சல்லடை	பணம்	நூல்	
கிணறு	தோட்டம்	கரி	புஸ்தகம்	கட்டை	
கயிறு	கொல்லை	மேஜை	தொட்டில்	ஓரம்	
சாக்கடை	கக்கூஸ்	கடியாரம்	சிலேட்டு	நடு	மத்தி

வீட்டு, வெளிப் பிராணிகளின் பெயர்.

பூனை	பசு	குதிரை	பன்றி	கழுநீர்
பூனைக்குட்டி	கன்றுக்குட்டி	கழுதை	எலி	வைக்கோல்
நாய்	எருமை மாடு	குரங்கு	அணில்	சாணி
நாய்க்குட்டி	ஆடு	யானை	புல்	மூத்திரம்
எச்சில்	காக்கை	கிளி	ஓணான்	மரவட்டை
குப்பை	குருவி	கொக்கு	தேள்	கரப்பான்
வால்	கோழி	மயில்	நத்தை	பாம்பு
கொம்பு	பல்லி	கோழிக்குஞ்சு		

செய்கையைக் காட்டும் சொற்கள்.

பார்	பேசு	தப்பு	தெரியும்	வா
நட	பாடு	தம்பு	தெரியாது	எழுந்திரு
கேள்	நீட்டு	ஊது	எட்டு	உட்கார்
தொடு	ஆட்டு	கத்து	சொல்லு	நில்
ஓடு	உமி	மாட்டு	போ	குதி
அழு	வை	எழுது	தூக்கு	தாங்கு
சாப்பிடு	தா	வாசி	போடு	தின்னு
குடி	மூடு	பிடி	ஜயி	படி
நிமிர்	திற	அவிழ்	தேடு	உடை
குனி	எண்ணு	சுருட்டு	விழு	ஒடி
எடு	படு	குளி	கட்டு	சிரி
எறி	ஊற்று	ஏற்று	பின்னு	தேடு
கிழி	தோய்	அணை	தை	ஒளி
கொடு	தேய்	அசை	நகர்	காட்டு
இழு	பிடுங்கு	அடி	அழி	அலம்பு
இறை	எழும்பு	கடி	சமை	கோலம் போடு

வீட்டுச் சாமான்கள். (சமையலறை)

தோண்டி	தாம்பாளம்	கிண்ணம்	புளி
கரண்டி	தவலை	அரிசி	வெல்லம்
சொம்பு	அகப்பை	உப்பு	கடுகு
கூஜா	தட்டு	மிளகாய்	பயறு
கங்காளம்	சட்டி	கற்கண்டு	கடலை
வாணலி	அடுக்கு	பெருங்காயம்	ரவை
கல்சட்டி	ஈயச்சொம்பு	முந்திரிப்பருப்பு	கோதுமை
பானை	அலுமினியம்	மொச்சைக்கொட்டை	எண்ணெய்
உளுந்து	துவரம்பருப்பு	விளக்கெண்ணெய்	மண்ணெண்ணெய்
புட்டி	டம்ளர்	நெருப்பு	அவல்
அண்டா	கெண்டி	நெருப்புப் பெட்டி	அகல்
அடுப்பு	பொரி	வெண்கலப்பானை	பாத்திரம்
சீயக்காய்	மஞ்சள்பொடி	மாவு.	

காய் கறி, பூ, பழம், கிழங்கு வகைகள்

வாழை	எலுமிச்சம்பழம்	முள்ளங்கி	மருக்கொழுந்து
தென்னை	அவரைக்காய்	வேப்ப மரம்	கருவேப்பிலை
மா மரம்	முருங்கக்காய்	வேப்ப இலை	கொத்தமல்லி
புளிய மரம்	புடலங்காய்	வாழை இலை	கரும்பு
தேங்காய்	பாகல்காய்	வாதா இலை	மஞ்சள்
வெள்ளரிக்காய்	வெண்டைக்காய்	ரோஜாப் பூ	கத்தரிக்காய்

நார்த்தங்காய்	சுண்டைக்காய்	மல்லிகைப் பூ	கீரை	மரு
களாக்காய்	பூசனிக்காய்	சாமந்திப் பூ	வாழைத்தண்டு	
வாழைப்பழம்	இலந்தப் பழம்	தாழம் பூ	உருளைக்கிழங்கு	
மாம்பழம்	ஆரஞ்சுப் பழம்	பவழமல்லிப் பூ	சேப்பங்கிழங்கு	
பலாப் பழம்	முந்திரிப் பழம்	கொய்யாப் பழம்	கருணைக் கிழங்கு	

இயற்கை சம்பந்தமானவை

குளிர்	காலை	தூரல்	நக்ஷத்திரம்	மானம்	
வெயில்	இரவு	இடி	வெளிச்சம்	தண்ணீர்	
சூடு	மழை	சூரியன்	இருட்டு	ஜலம்	
பனி	மத்தியானம்	சந்திரன்	ஆகாசம்	காற்று	நிலா.

நிறம்

மஞ்சள்	சிவப்பு	கறுப்பு
பச்சை	வெள்ளை	நீலம்

வீட்டின் வெளிப்புறம்

தெரு	தேர்	அம்பட்டன்	மாட்டுவண்டி	
சாம்பல்	போலீஸ்காரன்	வைத்தியன்	ஆணி	இரும்பு
ஓலை	ஜட்கா	உபாத்தியாயர்	கடுதாசு	
கீத்து	வண்டி	மீன்	குயவன்	
கடை	சாணான்	ஆறு	சைகிள்	
ரயில்	தச்சன்	வயல்	மோட்டார்	
தபால்காரன்	வண்ணான்	தட்டான்	பிச்சைக்காரன்	

உற்சவம், கலியாணம், பண்டிகை.

கோயில்	பூஜை	பூணூல்	ஹநுமார்	பொங்கல்
கோபுரம்	மேளம்	ஊதுவத்தி	பிள்ளையார்	போளி
சுவாமி	கலியாணம்	வாசனை	ஸரஸ்வதி	பஜனை
பல்லக்கு	ஊஞ்சல்	பந்தல்	நடராஜர்	பாட்டு
கூடம்	நலங்கு	தீபாவளி	ராமர்	கூத்து
சாம்பிராணி	மாப்பிள்ளை	கார்த்திகை	கிருஷ்ணர்	

வஸ்துக்களின் தன்மையைக்குறிக்கும் சொற்கள்.

பெரியது	உயரம்	கட்டையாக	மேலே	
சிறியது	உருண்டை	மெல்லியதாக	கீழே	
நன்றாக	அழகாக	மெதுவாக	சரி	
கெட்டு	சொரசொரப்பு	வேகமாக	தப்பு	
நீளம்	கொழகொழ	சீக்கிரம்	நிஜம்	பொய்

நோய்.

தலைவலி	காதுவலி	இருமல்	மொட்டை	ஊமை	
ஜுரம்	கண்வலி	ஜலதோஷம்	பாவாடை	இரத்தம்	
வயிற்றுவலி	சிரங்கு	பொட்டை	நொண்டி	பல்வலி	மருந்து

கதை கேட்பதில் கேட்டுப் பழகின சொற்கள்.

பெண்	புலி	நாளை	இங்கே	என்ன
பிள்ளை	கரடி	நாள்	கப்பல்	பாதி
கதை	இன்று	வருஷம்	ஆம்படையான்	மூட்டை
இராஜா	நேற்று	அதோ	பெண்டாட்டி	அப்புறம்
காடு	காசு	அங்கே	ஏன்	எவ்வளவு
சிங்கம்	ரூபாய்	இதோ	எங்கே	

நாள், மாதம் எண்கள்.

ஞாயிறு	புதன்	சனி	மூன்று	ஏழு
திங்கள்	வியாழன்	ஒன்று	நான்கு	எட்டு
செவ்வாய்	வெள்ளி	இரண்டு	ஐந்து	ஒன்பது
			ஆறு	பத்து

(சொல்லிக் கொடுத்து பழக்க மிருந்தால் மாத்திரம்)

சித்திரை	ஆடி	ஐப்பசி	தை
வைகாசி	ஆவணி	கார்த்திகை	மாசி
ஆனி	புரட்டாசி	மார்கழி	பங்குனி

குழந்தையின் பாஷை பெற்றோர் பேச்சு, குடும்பத்தின் பேச்சு, சமூகத்தின் பேச்சு, இட வசதி, இட அமைப்பு, பேசக்கொடுக்கப்பட்ட அவகாசம் இவைகளை யொட்டி வேறுபடும். ஒரே சொல்லுக்கு ஊர்களுக்குத் தகுந்தாற்போல் சில வேறுபாடுகளும் இருக்கலாம்.

ஈருள்ளி — வெங்காயம்	
கண்மாய் — ஏரி	
ஊருணி — குளம்	
தடியன் காய் — பூசனிக்காய்	
கேப்பை — கேழ்வரகு	
ஆணம் — குழம்பு	

என்றவாறு வித்தியாசப்படுகிறது. பின்னுள்ள படி பேசிப்பழகினவர்களுக்கு முன்னிருக்கும் வார்த்தைகள் காதுக்குப் புதிதாகக் காணப் படுகின்றன. ஆனால் அவற்றையே பேசிப் பழகின குழந்தைகளுக்கு அவை பழக்கத்தில் வந்தவைகளே. அதன் பொருட்டே பழக்கத்தில் வந்த சுலபமான வார்த்தைகளையே ஆரம்ப வகுப்பு வாசிப்புப் பாடங்களில் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கல்விமான்கள் வற்புறுத்துகிறார்கள்.

கலையும் கைத்தொழிலும்

III

R. M. Savur, *Divisional Inspector of Schools, Coimbatore.*

ஓய்வு நேரத்தில் செய்யக்கூடிய வேலைகள்.

எதையாவது ஒன்றைக் கற்கும்போது செய்துக் கற்றலே சிறந்த முறை யென்று எல்லோரும் சொல்வார்கள் ஆகையால் பாட திட்டங்களில் கூட செய்கை முறையில் கற்கவேண்டிய விஷயங்களுக்கு இடம் உண்டு. ஆனால் பலர் செய்துக் கற்றலின் விசேஷத்தை மறந்து விடுகின்றனர். கல்வியின் நோக்கம் நல்வாழ்க்கையாகுமானால், கல்வி கற்கும் போது சிறுவர்கள் தம்வயது காலத்தில் நல்வாழ்க்கை வாழவும், ஓய்வு நேரங்களை வீணாக்காமல் பயன் படுத்திக்கொள்ளவும் பயிற்சி பெற வேண்டியது அவசியமல்லவா? பள்ளிக்கூடங்களில் பாடங்கள் முடிந்த பின் சிறுவர்கள் தாமாகவே இஷ்டப்பட்டுத் தமக்கு மகிழ்ச்சி அளிக்கக் கூடிய வேலைகளைச் செய்யும் பழக்கம் பெறவேண்டும். அந்த குணங்களில் அவர்கள் கற்கும் கைத்தொழில் பிற்காலத்தில் ஓய்வு நேரங்களை இனிது கழிக்கப் பெரிதும் பயன்படும் என்பதில் சந்தேகமில்லை. மலிவான, சிறிய கருவிகளைக்கொண்டு சிறுவர்கள் சில தொழில்களை நன்றாகத் திறமையுடன் கற்றுக்கொள்ளும்படி செய்வது ஆசிரியர் பொறுப்பாகும்.

அநேக கைத்தொழில்களுக்கு மலிவான கருவிகளைச் சிறுவர்களே தயார்செய்து கொள்ளலாம். சில கருவிகளைக்கொண்டே பலவித தொழில்களைச் செய்வது சாத்தியமாகும். சிறுவர்களும் சிறிது சிறிதாகப் பல கருவிகளைச் சேமித்து வைத்துக்கொள்ளும் பழக்கம் பெறவேண்டும்.

குண்டூரில் சில வருஷங்களுக்குமுன் நடந்த பொருட்காட்சி ஒன்றில் இரண்டு தரத்து 'வீனோ - கட்டிங்' கருவிகள் காணப்பட்டன. அவைகளில் ஒருவிதக் கருவிகள் அயல் நாட்டிலிருந்து வந்தவை. அதிக விலையுள்ளவை. மற்றொரு தரத்துக் கருவிகள் சிறுவர்களால் குடைக்கம்பிகளினால் செய்யப்பட்டவை. இவ்விரண்டு கருவிகளினால் செய்யப்பட்ட அச்சுக்களும், அச்சடித்த துணிகளும் அங்கு காணப்பட்டன. குடைக் கம்பிகளினால் செய்யப்பட்ட கருவிகளைக்கொண்டு தயாரிக்கப்பட்ட லினோ - கட்டுக்களும், அச்சுக்களும், எவ்விதத்திலும் தாழ்ந்தவைகளாக இருக்கவில்லை.

கற்பிக்க வேண்டிய கைத்தொழில்கள்

பள்ளிக் கூடங்களில் கற்பிக்க வேண்டிய கைத்தொழில்களைப் பற்றித் தப்பு அபிப்பிராயங்கள் இருந்து வருகின்றன. கல்வி இலாகாவிலிருந்து கிடைக்கும் பொருள் உதவியை எதிர்பார்த்தோ அல்லது வேறு காரணங்களினாலோ செலவில்லாமல் செய்யக்கூடிய சாமான்களையும் விற்பனையாகக்கூடிய சாமான்களையும் பள்ளிக்கூடங்களில் செய்வது தான் கைத்தொழில் பாடங்களின் நோக்கமாக இருந்து வருகின்றது.

கைத்தொழிலுக்காகத் தேர்ந்தெடுக்கும் பாடங்கள் சிறந்த திறமையை உண்டாக்கும் படியாக இருக்கவேண்டும்; கலைகளில் வல்லமையுடைய சிறுவர்களுக்குக் கலைஞானம் ஓங்கவும் சித்திரப்பாடமைந்த சிறந்த உருவங்களை சிருஷ்டிக்கவும் பயன்படவேண்டும்; சாதாரண சிறுவர்களுக்கும் ஏற்றதாக இருக்கவேண்டும்; ஆரம்பத்தில் எளியதாகவும், நாள் செல்லச் செல்ல கலைவளர்ச்சியை உண்டாக்குவதாகவும் இருக்கவேண்டும். சிறு பள்ளிக்கூடங்களில் கூட அதிக செலவில்லாமல் செய்யக்கூடிய பல கைத்தொழில்கள் இருக்கின்றன.

தப்புவழியும் சரியான வழியும்

கைத்தொழில் திட்டங்களுள் சரியான முறையும், தப்பான முறையும் இருக்கின்றன என்பதற்கு ஒரு உதாரணம் கூறுகின்றேன். 'புக்பைண்டிங்' என்ற தொழிலை எடுத்துக் கொள்ளுவோம்.

சில பள்ளிக்கூடத்தில் இத்தொழில் சரியான முறையில் போதிக்கப்படவில்லை என்பதை அறிவேன். 'பைண்டிங்' வேலைக்காகப் பணம் செலவழித்து, பல கருவிகள் அங்கு வாங்கி இருக்கிறார்கள். ஆனால் தொழிலில் சரியான பயிற்சி சிறுவர்களுக்கு அளிக்கப்படவில்லை. நாள் தோறும் சிறுவர்களிடம் பள்ளிக்கூடத்தின் பெயரை அச்சிட்ட அட்டைகளைக் கொடுத்து நோட்டு புத்தகங்களைத் தைக்கச் சொல்லுகிறார்கள். இந்த நோட்டு புத்தகங்களை சிறுவர்களுக்கு குறைந்த விலைக்கு விற்பதாகவும் தெரியவில்லை. இரண்டு மூன்று மாதங்கள் கழித்து, பள்ளிக்கூடத்தின் புத்தகசாலையிலுள்ள கிழிந்த புத்தகங்களை 'பைண்ட்' செய்யச் சொல்லுகிறார்கள். வருஷம் முழுவதும் சிறுவர்கள் கற்றுக் கொள்ளுவது இவ்வேலைகள் தான்.

சரியான முறையாவது

'புக் பைண்டிங்' என்பது புத்தகங்களை உற்பத்தியாக்கும் தொழில்களுள் முக்கியமானது. புத்தகங்களை எவ்வாறு காப்பாற்றவேண்டும், சித்திர அமைப்புடன் வேலை செய்யவேண்டும் என்பதைச் சொல்லிக்கொடுத்தல் அவசியம். எழுதுதல், பக்கங்களை வரிசைப்படுத்துதல், சித்திரம் அமைத்தல், லினோகட், உட்கட் முதலிய அச்சுக்களைச் செய்தல், முடிவுத்தாள்களை அலங்கரித்தல், எழுத்துக்களை ஏற்றவாறு அமைத்தல் முதலிய பல விஷயங்களைச் சிறுவர்கள் கற்றல் அவசியம். புத்தகம் எவ்வாறு செய்யப்படுகின்றது, அதன் அழகை எப்படி அமைக்கலாம் என்ற தொழிலை 'பைண்டிங்' தொழிலில் சொல்லிக் கொடுக்கவேண்டியது அவசியம். பல சாமான்களிலிருந்து தகுந்தவைகளைப் பொறுக்கி எடுத்து, சித்திரப்பாடு அமைத்து, வர்ணங்களும் சேர்த்து அழகிய புத்தகம் எவ்வாறு செய்யவேண்டும் என்று சிறுவர்கள் அறிந்து கொள்ளுதல் இத்தொழிலின் நோக்கம். இவ்வாறு செய்தால் இத்தொழில் மூலமாக கற்கவேண்டிய பல விஷயங்கள் இருப்பதைக் காணலாம். தொழிலும் பயனுள்ளதாக விருக்கும். இல்லாவிட்டால் நோட்டு புத்தகங்கள் செய்வதில் ஒருவித நன்மையும் உண்டாகாது.

தாய்மொழி கற்பித்தல்

M. Subramaniam, *L. M. C. High School, Shiyali.*

I. மொழியின் பொது இலக்கணமும்—தாய் மொழியின் சிறப்பும்

மொழி என்றால் என்ன ?

இவ்வுலகத்தில் வாழும் உயிருடைய பொருள்கள் எல்லாவற்றிலும் மக்களே சிறந்தவர் ஆவர். இவர் பற்பல தேசங்களில் பற்பல வகுப்பினராகவும், ஒவ்வொரு வகுப்பினரும் ஒரு தக்க முறையில் ஒன்றுகூடியே வாழ்ந்து வருகின்றனர். இப்படி மக்கள் ஒன்று சேர்ந்து வாழும்போது, கேவலம் விலங்கினம்போல் உண்டு, களித்து, உறங்கி இராமல் ஒருவர் உட்கருத்தை மற்றொருவருக்கு வெளிப்படுத்த பல முயற்சிகளைச் செய்கிறார்கள். கருத்துக்களை வெளிப்படுத்தற்குரிய முயற்சிகள் பல இருப்பினும், மொழிநூல் வல்லோர் வகுத்தபடி அவை சிலவேயாகும். கை சைகைகளாலும், முகக்குறிகளாலும், உடல் நிலைகளாலும் சிலர் தத்தம் கருத்துக்களை வெளியாக்குகின்றனர். இவ்வாறு பொதுவாக ஊமைகளே செய்கின்றனர். பின்னும் இன்பதுன்பங்களையும், வெறுப்பு விருப்புக்களையும் முகக்குறியாலும் பிறவற்றாலும் ஒருவேளை சிலர் வெளியிடலாம். இருளர்,மறவர் முதலியோர் பண்டைக்காலத்தில் விலங்கினங்களைப் பிடிக்கும்போதும் தங்கள் இனத்தவர்களுக்கு இரகசியமானவற்றைத் தெரிவிக்கும்போதும் போலி ஒலிகளையும் பரிபாஷைகளையும் உபயோகித்ததாகத் தெரிய வருகிறது. இத்தகைய முயற்சிகள் யாவும் வரையுள்ளனவே. இவர்கள் தங்கள் உள்ளத்தில் நிகழும் எல்லாக் கருத்துக்களையும் இவ்விதமாக வெளியிட இயலாது. ஒருவன் உணர்ந்ததையும், அறிந்ததையும், அநுபவித்ததையும், தன் அருகில் உள்ளவர்க்கும், பிறர்க்கும் சொற்றொடர் மூலமாகவே வெளியாக்க முடியும். இச்சொற்றொடர்களும், காலத்திற்கும் இடத்திற்கும் சமூகத்திற்கும் தகுந்தாற்போல் அடிக்கடி மாறாமல் தொன்று தொட்டு எல்லோராலும் அங்கீகரிக்கப் பட்டதாய் இருக்கவேண்டும். எனவே, மொழி என்பது பொதுவாக மக்கள் வழங்கும் குறிகளையும் குறியீடுகளையும், ஒலித்தல் முதலிய வற்றைக் குறிப்பினும், சிறப்பாக கருத்துக்களுக்கும் பொருட்களுக்கும் இடமாக இருக்கும் சொற்களையே குறிக்கும். சொற்றொடர் மொழியே மனிதனுடைய பிறப்புரிமையும் தனித்தன்மையும் ஆகும்.

சொல்லும் - பொருளும்.

இனி, சொற்களிலும் சொற்றொடராகிய மொழியிலும் அடங்கியுள்ளவை எவை? உடம்பில் உயிர் ஒன்று இருப்பதுபோல் சொல்லில் பொருள் அடங்கியுள்ளது என்பதை விளக்கத் தொல்காப்பியரும் "எல்லாச்சொல்லும் பொருள் குறித்தனவே" என்றார். பொருளற்ற சொற்கள் பயனற்றவையாகும். ஒரு பொருள், ஒரு செயல், ஒருபண்பு முதலியவற்றையே ஒரு சொல் குறிக்கும். ஒரு சொற்றொடர் ஒரு கருத்தை உணர்த்தக்கூடும். மேலும், பேசும் இயல்பினதாகவும், எழுதும் தன்மையுள்ளனவாகவும் இருப்பதே சொல்லாகும். ஆதிக்காலத்தில் மனிதர் தங்கள் புலன்களுக்கு நேரில் விளங்கும் பொருட்களைப் பற்றியே கவனித்தபடியால் பொதுவாக அவர்கள் வழங்கிவந்த சொற்கள் பெயர்ச்சொற்களாகவே இருந்தனவாம். பின்பு பண்பு, வினை, கருத்து முதலியவற்றை விளக்கும் சொற்கள் உண்டாயிருக்கவேண்டும் என்று மொழிநூல் வல்லோர் கருதுகின்றனர். சிறு குழந்தைகளும், ஒரு பொருளைக் காட்டும் சொல்லையே முதன் முதல் சொல்லுகின்றன. பின்பு வினைச்சொற்களை உபயோகிக்கத் தெரிந்துகொள்கின்றன. பொருட்களைக் குறிக்கும் பெயர்ச்சொற்களும் அவற்றின் செயலைக்காட்டும் வினைச்சொற்களுமே மொழியின் தன்மை என்பதைக் காட்டத் தொல்காப்பியர்

"சொல் லெனப்படுப பெயரே வினையென்
றாயிரண் டென்ப——" என்று கூறினர் போலும்.

மொழிவளர்ச்சி

பொருளும் கருத்தும் அடங்கிய சொற்களால் ஆனமொழி, நாளடைவில் எவ்விதம் வளர்ச்சியடைந்து வருகிறது? வளர்ச்சி அடையும் மொழியே உயிருள்ளது ஏனையவை இறந்தவைபோல் ஆகும். கலப்பான நல்லுணவால் உயிர்கள் செழுமையாக வளர்ச்சியடையும். மொழியும் பல நாட்டு நல்லறிஞர் அவ்வப்போது வெளியிடும் உயர்ந்த கருத்துக்கள் அடங்கிய சொற்களின் சேர்க்கையாலும், மக்கள் அதை அதிகமாக உபயோகிப்பதாலும், இன்னும் பிறவற்றாலும் ஓங்கி வளரும். ஒரு குடும்பத்தில் பலர் தோன்றி பல இடங்களில் தத்தம் விருப்பம்போல் வசிக்கிறார்கள். இம்மாதிரியே ஒரு மொழியிலிருந்து இடத்திற்கு ஏற்றவாறு பல மொழிகளும், கிளைமொழிகளும் உண்டாகின்றன. இப்படிப் பெருகி வளர்வதால் முதன் மொழியின் தனிச்சிறப்பு கெடுவதில்லை. பொதுவாகப் புதுப்புது நூல்கள் தோன்றுவதாலும், மொழிபெயர்ப்பு, சமூக சேர்கை, முதலியவற்றாலும, மக்கள் தாராளமாகப் பேசுவதாலும், மொழியானது வளர்ச்சி அடைகிறது.

பிற மொழி கலப்பின் தன்மை

இவ்வாறு வளர்ச்சியடையும் ஒரு மொழியில் பிறமொழிகலப்பின் தன்மை எப்படி இருக்கிறது? ஒரு மொழியில் வேறு மொழியின் சிற்சில

சொற்கள் கலக்கும்போது, சிலர் தமக்குச் சொந்தமான இடத்தை விட்டு வேற்றிடம் சென்று தங்கி இருக்கையில் எப்படி அவ்விடத்திற்குத் தக்கவாறு தம்மைப் பொருத்திக் கொள்கிறார்களோ அப்படியே சொற்களும் தத்தம் உரு, ஒலி ஆகிய இவை சற்று மாறி பொருள் மாறாமல் கலக்கக்கூடும். "பைசாசம்" "உலோகம்" என்னும் சொற்கள் 'பிசாசு' 'உலோவம்' என்று மாறிவருகின்றன தமிழ் மொழியிலும் திசைச் சொற்கள் ஏராளமாக உருவும் ஒலியும் மாறிக்கலந்து இருக்கின்றன. தவிர, ஒரு மொழியின் பெயர்ச் சொற்களே விசேஷமாக வேறு மொழியில் கலப்பது இயல்பாயிருக்கிறது. இத்தன்மையுள்ள மொழி கல்விக்கு எவ்வாறு துணையாக இருந்து வருகிறது?

மொழியும்-கல்வியும்

கல்வியின் உண்மையான நோக்கம் ஒருவனுடைய உள்ளத்தில் உண்டாகும் பல்வித உணர்ச்சிகளையும், அறிவையும் வெளியாக்குவதாகும். இதற்கு முதற் சாதனமாயிருப்பது மொழியே. கல்விபுகட்டும் ஆசிரியர்களும், கற்கும் மாணவர்களும் தத்தம் பயனை அடைய சொல்வன்மை இல்லாமல் முடியாது. "பேசக்கற்பித்தவர் தெய்வத்திற்குச் சமமாவர்" என்று ஒரு எகிப்திய பழமொழியுண்டு ஒருவன் தான் நினைத்ததையும், உணர்ந்ததையும், அனுபவித்ததையும், தட்டித்தடுமாறியாகிலும் மொழியின் மூலமாகவே சொல்லவேண்டும். சிறுவர்கள் மற்றெல்லாப் பழக்கத்தைக்காட்டிலும் மொழிப் பழக்கத்தையே விரும்புகின்றார்கள். கதைகளை வாசித்தல், சொல்லக்கேட்டல், பொருட்களைப் பற்றி இனிய நடையில் ஆசிரியர் சொல்லக்கேட்டல், உரை நடை, செய்யுள் முதலியவற்றைப் படித்தல் முதலியவை, சிறுவர்களுக்கு உத்ஸாகத்தைத் தருகின்றன. கல்வியின் நோக்கம் ஈடேறுவதும், கற்றோர்கள் பலனை அடைவதும், கருத்துக்கள் செவ்வனே அமைவதும், ஒரு நாட்டின் நாகரீகம் உயர்வதும், நன்மொழி பெருக்கத்தாலன்றோ! கல்வியே இவற்றை எல்லாம் ஓங்கச் செய்யும். மொழியின் பொருள் நுட்பத்தையும் பிறவற்றையும் உண்டாக்கும். ஆகையால் மொழி பயிற்சியே கல்விக்கு அடிப்படையாகும்.

தாய்மொழியும்—உண்மைக்கல்வியும்

ஒருவனுடைய கல்வி நிறைவாகவும், உண்மையாகவும் இருக்க வேண்டுமானால் அவன் பிறந்து வளர்ந்து வசித்து வாழ்ந்துவரும் தாய் நாட்டின் மொழியின் மூலமாகவே கல்வி பயிலவேண்டும். ஒருவனுடைய உள்ளத்துணர்வும், மனோவிகாரங்களும, உயர்ந்த இலட்சியங்களும், சிறந்தமனோ பாவங்களும், தாய்மொழியின் மூலமாகவே வெளியாகின்றன. பிறமொழி பயிற்சியால் முடியாது. ஏனென்றால் ஒருவனுடைய பிற மொழித்திறமை எவ்வளவுதான் உயர்ந்த தன்மையாயினும், அம்மொழிக்குரியோரால் சிறிதளவு குற்றம் கண்டுபிடிக்கப்படும்; ஆகையால்

தாய் மொழியைத் தவிர்த்துப் பிறமொழியில் புலமை அடைதல், ஓர் தேக்கமடைந்த குளத்து நீருக்குச் சமமாகும். தாய்மொழிப்புலமை வரம்பில்லாத தூய்மையான ஆற்று நீர்ப்பெருக்கத்திற்கு ஒப்பாகும். தாய் மொழியானது ஒருவனுடை முழு பௌருஷத்தையும், சக்தியையும் வெளியாக்கும். வேறு ஒருவனுடைய உயிர்நிலையாகிய உணர்ச்சிகளையும் கவரும். சிறந்த பாவலர் தம் உள்ளக்கனலிலிருந்து எழும் பேருணர்வு களை தாய்மொழியின் வாயிலாகவே கவிபுருவமாய் வெளியாக்கி இருக் கின்றனர்.

தாய் மொழியைப்பற்றிய ஓர் ஐயம்

இவ்வளவு உயர்வான தாய்மொழியைப்பற்றி ஓர் ஐயம் சிலருக்கு இருக்கலாம். ஒருவன் தன் சொந்த நாட்டைவிட்டு வெகுகாலம் பிரிந்து வேறு நாட்டினரோடு வசித்து வரும்போது அம்மொழியே பழக்கத்தில் அதிகமாய் வந்துவிடும். அல்லது ஒருவனுடைய தாயும் தந்தையும் வெவ் வேறுநாட்டினராக இருந்தால் அவனுடைய தய்மொழி எது? கன்னட தேசத்தில் பிறந்தவன் தன் நாட்டை விட்டு தமிழ் நாட்டில் குடி ஏறி பல நூற்றாண்டுகளாக வசித்து வந்து அவன் தமிழ்மொழியைத் தக்க சுவை யுடன் பேசினாலும் அவன் தாய்மொழி தமிழாகுமா? ஆகாது. ஏனென் றால் அவன் உடலில் ஓடும் இரத்தம் அவனுடைய முன்னோர்களான கன் னட மொழியாளரின் இரத்தமாகும். இக்காரணங்கொண்டே ஒவ்வொரு நாடும் மொழிப்பிரகாரம் வகுக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே, தாயால் தன் மதலைக்குச் செவிகளில் முதன் முதல் மொழிந்த மொழியே தாய் மொழி எனினும், அதன் முன்னோர்கள் பிறந்து, வளர்ந்து வாழ்ந்து வந்த நாட்டின் மொழியே தாய் மொழியாகும். இதற்குச் சந்தேக மில்லை.

தாய்மொழியை ஏன் கற்பிக்கவேண்டும்

ஒருவனுக்கு அவனுடைய தாய் மொழியையும் கற்பிக்க வேண் டுமா? அது இயல்பாக அவனுக்கு வரக்கூடும் அல்லவா? எப்படி ஒவ் வொரு உயிரும் தான் வசிக்கும் இடத்திற்குத் தக்கவாறு தன்னைப் பொருத்திக்கொள்கிறதோ, அப்படியே ஒரு சமூகத்தில் பிறந்தவன் அதற்குத் தக்கவாறு தன்னைப்பொருத்திக்கொண்டு தன் தாய் மொழியை கஷ்டமில்லாமல் கற்கக்கூடாதா? இவ்வாறுநினைப்பது தவறாகும். மக்கள் பொதுவாக உழைத்தும், உண்டும், உறங்கியும் வாழ்க்கையின் பெரும் பொருள்களையும் பயனையும் அறியாமல், வருகிறார்கள். இவர்கள் தங்கள் வாழ்க்கைக்குரிய பொருட்களைத் தவிர வேறு விஷயங்களைக் கவனிப்பதில்லை. இவர்களுக்கு எவ்விதமான சிந்தனையிலும், பிரச்னைகளி லும் விருப்பம் கிடையாது. தாய் மொழியின் இயல்பு, சிறப்பு, சுவை யுடைமை முதலியவற்றைக் கற்றுக் கொள்வதற்குப் பதிலாய், இவர்கள் தங்களைச் சுற்றியுள்ள பொருட்களை மட்டும், தெரிந்துகொள்ள ஆசைப்

படுவார்கள். இதனால் தாய் மொழி விருத்தியடையாது. இது சரியான மனப்பான்மையும் அன்று. ஏனென்றால் தாய்மொழி கற்றலின் நோக்கம் தினசரி வாழ்க்கைக்கு மாத்திரமன்று, தன் முன்னோர்களுடைய அருமை, பெருமை, நாகரீகம், முதலியவற்றை அறியவும், தன் தாய் நாட்டுப் புலவர்கள் இயற்றியுள்ள இலக்கியத்தில் மலிந்து கிடக்கும் சொல் நயம் பொருள் நயம் முதலியவற்றை உணர்வோடு அறிந்து அனுபவிக்கவும் தான் கற்றது, கேட்டது உணர்ந்தது, அனுபவித்தது ஆகிய இவற்றைப் பிறர்க்கும் பிற்காலத்தவர்க்கும் பயன்படும் வண்ணம் அழகான நடையில் பொருள்பட எழுதிவைக்கவும், ஒருவன் தன் தாய்மொழியை வருந்திக் கற்கவேண்டும். சிறந்த புலவர்களுடைய இலக்கியத்திற்குச் சாவி இலக்கணப் பயிற்சியாகும். தொன்னூற்களையும், பெரிய காவியங்களையும் மொழியின் தன்மையையும், பொருள்நுட்பங்களையும், பிறவற்றையும் தெளிவாக அறிந்து கொள்ள தாய் மொழி பயிற்சி விசேஷமாக இருக்கவேண்டும். மேலும், தாய் மொழி வருந்திக் கற்றவனுக்கும் கல்லாதவனுக்கும் உள்ள வேறுபாடு அவனவன் வழங்கும் சொற்களாலே தெரியும். சொல்வளம், சொல் தெளிவு பொருள் திட்டம் இலக்கண வழுவில்லாத ஒழுங்கான எளிய நடை, பத்துக்குற்றம் நீங்கிய முறையான கருத்து அமைப்பு, முதலியனவும் முறைப்படி தாய்மொழி பயின்றவர்களுக்கே அமையும். கல்லாத ஒருவனுடைய சொற்களையும் கற்றறிந்த புலவர்களின் சொற்களையும் கணக்கிட்டுப் பார்த்தால் தாய் மொழி பயிற்சியின் மேன்மை விளங்கும். திருவள்ளுவர், இளங்கோவடிகள், கமபர் முதலிய சிறந்த கவிஞர்களின் சொல்வளத்தையும் எண்ணிக்கையையும் வரை அறுக்க முடியாது.

தாய் நாட்டு நிலைமையும் - தாய் மொழியும்

தற்போது நமது தமிழ்நாட்டு நிலைமை தாய்மொழி விருத்தியடைய மிகவும் பக்குவமாயிருக்கிறது. சில ஆண்டுகளாக நம்மவர்க்குள் கொழுந்துவிட்டு எறியும் ஒளி விளக்காகிய தேசபக்தி பல துறைகளிலும் வீசுகின்றது. சில காலம் தாழ்ந்த நிலையில் தங்கி இருந்த தமிழ் அன்னை இப்போது வரவர உயர்ந்த நிலையை அடைந்துகொண்டு வருகிறாள். பிற நாட்டுமொழி பயிற்சியில் சிறந்து விளங்கும் பெரியோர்களும், தங்கள் தாய்மொழியைக்கற்று அதில் பல புது நூற்களை இயற்ற முயன்று வருகிறார்கள். பற்பல பத்திரிகைகள் தாய் மொழியில் வெளியாகின்றன. பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்களைத் தமிழ் மொழியில் மொழி பெயர்க்க சிலர் முன் வந்திருக்கிறார்கள். இறவாத புகழுடைய "சுய சரித்திரம்" போன்ற புதுப் புது நூல்களும் தமிழ் மொழியில் பெரியோர்களால் எழுதப்படுகின்றன. கலாசாலைகளிலும் கல்லூரிகளிலும், தாய் மொழியில், பொதுக்கலை, விஞ்ஞானம், பொருளியல், அரசியல், சரித்திரம், வாணிபம், கணிதம், உயிர்நூல், வேதிநூல்

தரைநூல் ஆகிய இவற்றைக் கற்பிக்கவேண்டும் என்று அரசாங்கதிட்டமிருக்கிறது. இத்தருணத்தில் ஆசிரியர் தாய்மொழிக்குத் தொண்டு புரிவது எப்படி ?

தாய்மொழியும் ஆசிரியரும்.

தாய்மொழி வளர்ந்து விருத்தியடைய வேண்டுமானால், ஆசிரியர் சில உயர்ந்த இலட்சியங்களையும் நோக்கத்தையும் மேற்கொண்டு ஒழுக வேண்டும். இவர்கள் முதலாவது சிறுவர்களுடைய மனவியல்பைச் சரியானபடி அறிந்துகொள்ள விசேஷ மனோதத்துவ சாஸ்திரப் பயிற்சி பெறவேண்டும். இதனால் மொழி பயிலும் சிறுவர்களுடைய மனப்பான்மை, ஊக்கம், தனிவிருப்பம், உற்சாகம், கற்கும் திறமை முதலியவற்றைச் செவ்வனே அறிந்துக்கொள்ளக்கூடும். இக்காலம் 'சயன்ஸ்' சாத்திரத்தின் சகாப்தமாகையால் எவற்றையும் மிக விரைவாகவும் சுலபமாகவும், காலதாமதமின்றி கற்பிக்கவேண்டும். ஆகையால் ஆசிரியர் இரண்டாவதாக நவீனசாஸ்திரப்படி மொழிகற்பித்தல் முறைகளைத் தெரிந்துகொள்ளவேண்டும். மூன்றாவதாகச் சிறுவர்களுடைய உத்ஸாகத்தையும், விருப்பத்தையும் எழுப்பி, அவர்களை மேன்மேலும் தாய்மொழி இலக்கியங்களைக் கற்க ஆசிரியர் சிரத்தை எடுத்துக்கொள்ள வேண்டும். நான்காவதாக சிறுவர்கள் தங்கள் பள்ளிக்கூடங்களில் இனிமையாகப் பயின்ற மொழிப் பயிற்சியின் உதவியால், தங்கள் பிற்கால வாழ்க்கையில் தாங்களே தங்கள் தாய் நாட்டு இலக்கியச் சுவையை இன்பத்துடன் அனுபவிக்க, ஆசிரியர்கள் பயிற்சி அளிக்கவேண்டும். ஏனென்றால் ஒருவனுடைய உண்மையான தாய் மொழிப் பயிற்சியே அவனுடைய ஓய்வு நேரத்தில் இன்பமளிக்கும். இத்தகைய விருப்பத்தை உண்டாக்க ஒவ்வொரு தாய் மொழி கற்பிக்கும் ஆசிரியரும், தம்மாணாக்கரின் உணர்ச்சியையும், ஆர்வத்தையும் எழுப்ப, இன்னிசையோடு செய்யுட்களைப் படிக்க வேண்டும். பொதுவாகத் தாய்மொழியை வேண்டா வெறுப்பாய் போதிக்காமல், வேண்டிய அளவு சுலபமாகக் கற்பிக்க வேண்டும்.

(தொடரும்)

அறிவுத் தொகை*

எம். எஸ். ஸ்ரீநிவாஸ சர்மா, எம். ஏ.

அறிவு அளவைகள்

விஞ்ஞானப் பயிற்சியின் விசேஷப் பெருமை நுட்பமான **அளவைகள்.** மனிதனுக்கு மனிதன் வித்தியாசங்களும் ஏற்றத் தாழ்வுகளும் இருக்கின்றன என்று மாத்திரம் பொதுவாகச் சொன்னால் போதாது. ஒருவன் மேதாவி, மற்றவன் மந்தன் என்றாலும் பயனில்லை. புத்திசாலித்தனம்—(Intellegence)என்பது தனிப்பட்ட ஒரு பிரத்தியேகச் சக்தி. மனித வேற்றுமைகளுக்கு அடிப்படையான காரணம் புத்திசாலித்தனமாகும். மனிதத் தனித்தன்மைக்கு அஸ்திவாரமாகிய இந்தப் புத்திசாலித்தனத்தை மனோதத்துவ நிபுணர்கள் சென்ற 30-வருஷங்களாக ஆழ்ந்து பரிசீலனை செய்து, இதை அளக்கும் கருவிகளைக் கண்டு பிடித்து; அவைகளைக் கொண்டு, ஒவ்வொருவருடைய "அறிவுத் தோகை" யையும் (I. Q.: Intellegence Quotient) நிர்ணயிக்கிறார்கள். ஒன்று முதல் பதினாறு வரை ஒவ்வொரு வயதிற்கும் எவ்வளவு புத்தி வளர்ந்திருக்க வேண்டுமோ, அதை அளக்க "அறிவு அளவைகள்" (Intelligence Tests) ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. 10-வயது பையன் அந்த வயதுக்கென்று நியமிக்கப்பட்டிருக்கும் சோதனைகளில் தேறினால் அவனுக்கு "மன வயதும்" (Mental Age) 10—என்று சொல்லப்படும். இதுதான் "ஸராசரி அறிவு". ஒருவனது உடல் வயதும் (Chronological Age) மன வயதும் ஏகோபித்து ஒன்றுபட்டிருந்தால், பொதுவாக அவனைப் "புத்திசாலி" என்று சொல்லலாம். ஆனால் 10-வயது பையன் 12-வயதிற்கென்றேற்பட்ட சோதனைகளில் தேறினால் "மேதாவி" எனப் படுவான்; அவன் மனவயது 12-ம் அறிவுத் தொகை 120-ம் ஆகும். $\left(\frac{M}{C} \times 100 ; \frac{12}{10} \times 100\right)$ 10-வயது பையன் 8-வயதுக்குரிய பரீக்ஷைகளில் மாத்திரமே தேறினால் அவன் மனவயது 8-ம் அறிவுத்தொகை 80-ம் ஆகும். அவன் "மந்தன்" ஆவான். இந்த அறிவுத்தொகை ஆயுள் முழுவதும் மாறாமல், ஸ்திரமாக ஒரே நிலையில் இருப்பதால், அது ஒவ்வொருவருடைய சுய புத்தியின் ஆழத்தைக் காட்டும் கருவியாகக் கருதப்படுகிறது.

---

* திருச்சி அகில இந்திய ரேடியோவில் 20—5—41-ல் செய்த பிரசங்கம். இங்கு அனுமதியுடன் வெளியாகிறது

புத்திசாலித்தனம் என்றால் என்ன?

"ஆமாம்....பள்ளிக்கூடங்களில் வருஷ நடுவிலும் முடிவிலும் பரீக்ஷைகள் நடக்கின்றனவே. அவைகள் புத்தி கூர்மையை அளப்பதில்லையா?" என்று நீங்கள் கேட்கலாம். பள்ளிக்கூடப் பரீக்ஷையில் நல்ல "மார்க்கு" வாங்கும் பையன்தான் புத்திசாலியென்று அநேகர் நினைக்கிறார்கள். அது அவ்வளவு சரியன்று. நிர்ப்பந்தத்தோடு, குறிப்பிட்ட பாடங்களை, உபாத்தியாயர் சொல்லிக் கொடுத்த பின் திருப்பித் திருப்பிப் படித்து, "நெட்டுரு" பண்ணி "கிராமபோன்" மாதிரி ஒப்பித்து, மார்க்கு வாங்குவதில் என்ன ஸாமர்த்தியம் இருக்கிறது? "பையன் சமத்து, புத்திசாலி" என்றால், அவனுக்குத் திறமையையும் அறிவையும் மேலும் மேலும் அடைய அக்கரையும் ஆசையுமிருக்க வேண்டும். தன்னைச் சுற்றியுள்ள மனிதர்கள், பொருள்கள், ஸம்பவங்கள் முதலியவைகளை ஒருவர் தூண்டுதலுமின்றி, தானாகவே ஊன்றிக் கவனித்து, அவைகளின் தன்மைகளையும், காரணங்களையும், அறிந்து கொள்வதில் உத்ஸாஹ மிருக்கவேண்டும். பல காரியங்களைத் துரிதமாயும் செம்மையாயும் செய்து முடிக்கத் திறமை யிருக்கவேண்டும். ஒருவித கட்டாயமுமின்றி, எவருதவியுமில்லாமல், தன்னோடு ஸம்பந்தப்படும் மனிதர்களின் இயல்புகளைக் கவனித்து, ஸமயோசித புத்தியோடு, ஸந்தர்ப்பங்களுக்குத் தக்கபடி நடக்கவேண்டும். எடுத்த காரியத்தை நிறைவேற்றும் மன உறுதியும், எதையும் எளிதில் கற்கும் திறமையும், கற்ற அறிவைப் புதிய ஸந்தர்ப்பங்களில் உபயோகிக்கும் யுக்தியும், உறுதியான ஞாபகச் சக்தியும், வேகமானக் கற்பனை சக்தியும், புத்திசாலித் தனத்தின் விசேஷ அம்சங்களாகும். ஆனால், பள்ளிக்கூடப் பரீக்ஷைகள், பையன்களின் உண்மையறிவை அளப்பதில்லையென்று மனநூல் நிபுணர்கள் தீர்மானித்து, சிறுவர்களின் சுயபுத்தியைக் கண்டுபிடிக்கப் புதிய ஏற்பாடுகள் செய்துள்ளார்கள். இந்த வயதிற்கு இவ்வளவு புத்தி சூக்ஷ்மமும் செய்கைத் திறனும், ஒருவர் உதவியுமின்றித் தாமாக வளரவேண்டு மென்றும், ஒவ்வொரு வயதிற்கென்று தாங்கள் நிறுவிய அறிவு அளவைகளைப் பிரயோகித்து, அதற்குத் தகுந்தபடி வித்தியா முறையையும், தொழிற் பயிற்சியையும் அமைத்து வைத்தால் தான் வாழ்க்கைக்கு அனுகூலமா யிருக்குமென்றும், அவர்கள் சொல்லுகிறார்கள். ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் இந்த அறிவு அளவைகள் பரவி, ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும், புதிதாய் வந்து சேரும் சிறுவர்களின் புத்தி வளர்ச்சியை விளக்கும் மன வயதையும், ஞானத் தொகையையும் நிர்த்தாரணம் செய்து, கல்வி முன்னேற்றத்திற்கு முக்கிய காரணமாய் விளங்குகின்றன.

இங்கே ஒரு எச்சரிக்கை: அறிவு அளவைகள் போதுத்திறமையை மாத்திரமே அளக்கிறது. விசேஷ ஞானப்பிரபாவங்களான கணித பாண்டித்தியம், கவிதாவன்மை, யந்திரயுக்தி முதலிய பிரத்தியேகச் சக்தி

கள் தனிப்பட்டவை. அவைகளை ஸாதாரண அறிவு என்று சொல்லக் கூடாது. தினசரி வாழ்க்கைக்குப் பிரயோஜனமான "உலகஞானம்" என்று சொல்லுகிறோமே, அதாவது, பிழைக்கும் வழிக்கு ஸாதகமான அறிவு—அதைத்தான் "புத்திசாலித்தனம்" என்று மனநூலார் கூறுகின்றனர்.

யாருக்கு எத்தகைய கல்வி

அறிவு அளவைகளை நிர்மாணிப்பது மிகவும் கஷ்டம். ஒவ்வொரு வயதிலும் ஆயிரக்கணக்கான குழந்தைகளைப் பரீக்ஷை செய்து, அந்தந்த வயதுக்குரிய மனவளர்ச்சி யைத் தீர்மானிப்பது முதல் கடமை. அதன் பிறகு, இந்த அளவைகளைக் கையாண்டு, சிறுவர்களின் புத்தி கூர்மையை நிச்சயிக்கப் பிரத்தியேகப் பயிற்சியும், சிசு மானஸ நூலில் விசேஷ ஞானமும், பாலர்களுடைய அறிவு வழிகளில் நீண்டகால அனுபவமும் ஸம்பாதிப்பது இரண்டாவது கடமை. பையன்களுடைய அறிவுத் தொகையை நிர்ணயம் செய்து கொள்ளாமல், அவர்களுக்கு வருஷமுழுவதும் பாடம் நடத்திவிட்டு, கடைசியில் பரீக்ஷையில் அவர்கள் தவறிவிட்டால், அதற்காக அவர்களைக் கோபித்து கொள்வதும், உபாத்தியாயர்களை யோக்கியதை யற்றவர்கள் என்று, குறை கூறுவதும் ஒழுங்கல்ல. எண்பதிலிருந்து 90 வரை அறிவுத்தொகை உடைய சிறுவர்களை நமது ஹைஸ்கூல்களில் சேர்த்து வாசிக்க வைப்பதில் யாதொரு பயனுமில்லை. அவர்களை எலிமெண்டரி பாடசாலை படிப்புடன் நிறுத்திவிட்டு, ஏதாவது உபாயமான தொழிலில் பயில்விப்பது நல்லது. 90 முதல் 100 அறிவுத் தொகையுள்ளவர்களை மிடில் ஸ்கூல் படிப்பு முடிந்ததும், தொழிற் பாடசாலைகளுக்கு அனுப்பி, தொழில் ஞானம் பெற ஏற்பாடு செய்ய வேண்டும். ஹைஸ்கூல் படிப்பில் தேர்ச்சி பெற வேண்டுமானால் 100 முதல் 120 அறிவுத்தொகை இருக்கவேண்டும். ஏறக்குறைய 130 அறிவு ஈவு இல்லாதவர்கள் யூனிவர்ஸிடி பட்டங்களுக்கு லாயக்கற்றவர்கள். ஐ. ஸீ. எஸ். (I. C. S.) போன்ற அகில இந்திய போட்டிப் பரீக்ஷைகளில் வெற்றிபெற வேண்டுமானால் 130-க்குமேற்பட்ட ஞான ஈவு படைத்தவர்களா யிருக்கவேண்டும்.

மந்தர்கள்

அறிவுத்தொகை 75-க்குக், குறைந்தவர்கள் "மந்தர்கள்" எனப் படுவார்கள். இவர்களை மூன்று வகுப்புகளாகப் பிரிக்கலாம். (1) 30-க்குக் குறைவான அறிவுத்தொகை உள்ளவர்கள் "சுத்த மக்குகள்" (Idiots) அல்லது "மட்டி ஸாம்பிராணிகள்" என்று இவர்களை சொல்லலாம். இவர்களுக்கு அறிவு சூன்யம்; எதையும் கற்கும் சக்தி கிடையாது. நெருப்பில் கை விடுவார்கள்; குளத்திலும், ஆற்றிலும் இறங்கித் தவிப்பார்கள். மோட்டார் வரும்போது குறுக்கே நிற்பார்கள். இவர்

கட்கு ஞாபகமுமில்லை, யோசனையும் கிடையாது. (2) இவர்களுக்குச் சிறிது மேம்பட்டவர்கள் 30 முதல் 50 வரை அறிவுத்தொகையுடையவர்கள். இவர்களை "முட்டாள்கள்" (Imbeciles) என்று சொல்லலாம். இவர்கள் அபாயங்களில் அகப்பட்டுக்கொள்ள மாட்டார்கள்; அதிகப் பொறுப்பில்லாத காரியங்களை மேற் பார்வையில் செய்யக் கற்கிறார்கள்; குற்றேவல்களைத் திருப்திகரமாகச் செய்வார்கள். (3) 50 முதல் 70 அறிவு ஈவு உடையர்வர்கள் "பேதையர்கள்" (Morons). இவர்கள் சுலபமான மாமூல் காரியங்களை மேற் பார்வையின்றிச் செய்வார்கள். வேலைக்காரர்களாக அமர்ந்து, வீட்டு வேலைகளைச் செய்யவும், ஆடுமாடுகளை மேய்க்கவும், கொல்லன் பட்டரையில் கடைச்சல் யந்திரம் ஓட்டவும், எளிய தச்சு, தையல் வேலைகள் செய்யவும் ஆற்றலுள்ளவர்கள். அறிவீனத்தினாலேயே அனேகர் கெட்டவழிகளில் நடந்து குற்றம் செய்கிறார்கள் என்பது, மானஸ நூலின் துணிபு. அமெரிக்காவில் ஒவ்வொரு நியாய ஸ்தலத்திலும் மனோதத்துவ நிபுணர்களைக்கொண்டு குற்றவாளிகளின் அறிவுத்தொகையைக் கண்டு பிடித்து, அவர்களுடைய குற்றம் மடத்தனத்தினாலா, அல்லது இயற்கைத் துஷ்டத்தனத்தினாலா,—என்பதைத் தீர்மானித்து, கெட்டவர்களைச் சிறைச்சாலைக்கனுப்பி விட்டு, முட்டாள்களை "மந்தர்களின் விடுதி"களில் வைத்துச் சுலபமான. தொழில்களில் பழக்கிக் காப்பாற்றுகிறார்கள். மேலும் வேசித் தொழிலில் புகும் ஸ்திரீகளிற் பெரும்பான்மையோர் மந்த புத்தியினால்தான் இழிவான நடத்தைகளுக்கு ஆளாகிறார்களென்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. மந்தர்களும், வேசிகளும், குற்றவாளிகளும், பித்தர்களும் ஸமூஹ நாசத்திற்குக் காரண பூதர்கள்; இவர்களைப் பூண்டற ஒழித்தாலன்றி நாகரிக வாழ்வு வாழமுடியாது.

அறிவின் விநியோகம்

ஒரு ஜன ஸமூஹத்தில் அறிவுத்தொகை எவ்விதம் விநியோகிக்கப் பட்டிருக்கிறது என்பதைப்பற்றி ஆராய்ச்சிகள் நடைபெற்றுள்ளன. 100-க்கு 60 பேர் ஸராஸரி புத்திமான்கள்; ஏறக்குறைய நூறு அறிவுத் தொகை படைத்தவர்கள். 100-க்கு 20 பேர் மந்தர்கள்; 90—க்குக் குறைந்த புத்தித்தொகை யுடையவர்கள். 100—க்கு 20 பேர் மேதாவிகள்; 110-க்கு மேலான அறிவுத்தொகை யுடையவார்கள். இந்தப் புள்ளி விவரம் பிரதிநிதித்துவம் வாய்ந்ததாகக் கருதப்பட வேண்டும்; அதாவது உலகத்தில் எந்த தேசத்திலும், எந்த ஸமூஹத்திலும் பெரும்பான்மையோர் ஸாதாரண ஸராஸரி புத்திமான்களாகவும், சிறுபான்மையோர் அறிவிலிகளாகவும், பின்னும் சிலர் சிறந்த அறிவாளிகளாகவுமிருக்கிறார்களென்பது இதன் கருத்து. "கடவுளுக்கு ஸாமான்ய ஜனங்களின்மீது அத்தியந்த பிரேமை யிருந்திருக்க வேண்டும்! ஏனென்றால் அவர்களைத்தான் அவர் ஏராளமாகச் சிருஷ்டித்திருக்கிறார்"—என்று

அமெரிக்க குடியரசுத் தலைவர் ஆபிரஹாம்லிங்கன் (Abraham Lincoln) சொன்ன மொழியை மனநூல் ஆராய்ச்சி இன்று ஆதரிக்கின்றது !

அறிவுவளர்ச்சி எதுவரை ?

அறிவு அளவைகள் 16 வயது வரைக்கும் மாத்திரம் கணித்திருப்பானேன் ?—என்று கேட்கலாம். அறிவும் கற்கும் திறமையும் பிறப்பு முதல் தினே தினே வளர்ந்து, 16 அல்லது 18 வயதில் ஒரு ஒழுங்குக்கு வருகின்றன. தேகமும், மூளையும், நரம்பும், தசைநார்களும் வளரும் சமயத்தில்தான் அறிவும் வளரவேண்டும். அறிவென்பதும் சாமார்த்திய மென்பதும் என்ன ? தேக மானோவழக்கங்கள்தானே ! செடியையோ இளங்கொடியையோ சுலபமாக வளைக்கலாம் ; முற்றினமரத்தை வளைக்க முடியுமா ? அதனால்தான் "இளமையிற்கல்" என்னும் அனுபவ உண்மை பழமொழியாக விளங்குகிறது. அறிவும், ஆற்றலும், கற்கும் ஆவலும், இளயெளவன பருவத்தில் பக்குவமடைகின்றன. மூளையும், நரம்புகளும், பூரண வளர்ச்சியடைந்து, தேகப் பழக்கங்களும், மனப் பழக்கங்களும், ஊன்றிப்படிந்து ஸ்தாபிதமானபின், புதிய கலைகளைக் கற்றுத் தேர்ச்சி பெறுவதென்பது அஸாத்யமென்றே சொல்ல வேண்டும்.

கல்வி முன்னேற்றம்

கல்வி, ஸமூஹநிர்மாணம், ஜீவனோபாய திட்டம் முதலியவைகளுக்கு அறிவுத்தொகை விளக்குப் போலவும், வழிகாட்டி போலவும் நின்று, மஹத்தான உதவி புரிகின்றது. கல்வி அபிவிருத்தியடைய வேண்டுமானால், வித்தியாமுறையை மாற்றுவதிலும், ஆசிரியர்களை விரட்டுவதிலும் பயனில்லை. மாணவர்களின் அறிவுத்தொகையை நிர்ணயித்து, ஒரே அறிவுத்தொகை யுடையவர்களை வகுப்பில் சேர்த்துக் கல்வி புகட்ட வேண்டும். நியூயார்க் நகரத்தில் 8 வயதுள்ள 40 மாணவர்களைப் பொறுக்கி ஸராஸரி 165 அறிவுத் தொகையுள்ள 20 பேரை ஒரு இடத்திலும், 140 அறிவுத்தொகையுடைய 20 பேரை வேறு ஒரு இடத்திலும், வைத்துப் படிக்க வைத்தார்கள். ஒவ்வொரு பாடத்திற்கும் சிறந்த ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டனர். 140-க்கு மேற்பட்ட அறிவுத்தொகை யுடையவர்களாதலால், இவர்கள் யாவரும் நல்ல புத்திசாலிக் குழந்தைகள் என்பது சொல்லாமலே விளங்கும் ; மேலும் உயர்ந்த வம்சத்தில் பிறந்து, வளர்பவர்கள். மூன்று வருஷம் கழித்துப் பரீக்ஷை செய்து பார்த்தபோது, எல்லோரும் பிரபல முன்னேற்றம் அடைந்திருந்ததோடு, முதலில் சொன்ன 165 சராசரி ஈவுடைய 20 பிள்ளைகள், இயற்கைப் பாடத்திலும், கணக்கிலும், காவியத்திலும் பிரமிக்கும் வண்ணம் விருத்தியடைந்திருந்தார்கள்.

விசேஷச் சக்திகள்

ஆனால் உயர்ந்த அறிவுத்தொகை யிருப்பதனாலேயே, ஒருவன் இலக்கியத்திலாவது, ஓவியத்திலாவது, அரசியலிலாவது, வாணிபத்தி

லாவது தலை சிறந்து விளங்குவான் என்று சொல்வதற்கில்லை. அறிவுத் தொகை போதுத்திறமையின் அறிகுறிதானே! நுண்கலைகள், ஸமுதாய நிர்வாகத் தலைமை முதலிய தனித்தன்மை வாய்ந்த விசேஷப் பிரபாவங்கள் பிரத்தியேகமானவை; அனுபவத்தாலும், பயிற்சியாலும் அடையக் கூடியவையல்ல. அவைகள் சில உத்தம ஆன்மாக்களின் தனி ஸம்பத்துக்கள். அவைகளை எவ்வித கல்வி திட்டத்திற்காவது, அறிவு அளவைகளுக்காவது வரையறுக்க முடியாது. ஆனால் இதில் ஒரு விசேஷம். மனதத்துவ நிரிப்படி சித்தசக்திகள் யாவும் ஒன்றுக்கொன்று இணைக்கப்பட்டு பரஸ்பர ஸம்பந்தமுடையவைகளா யிருக்கின்றன. **(Law of Correspondence)** ஒன்று பலமாயிருந்தால் மற்றவைகளும் அதே வன்மையுடன் பிரகாசிக்கும். ஒரு சக்திதான் ஈனஸ்திதியிலிருக்கிறதே! அதற்கு ஈடு செய்ய வேறு ஏதாவது ஒரு சக்தி அதிக வளர்ச்சி பெற்றிருக்குமோ **(Law of Compensation)** என்கிற மூட நம்பிக்கைக்கு இடமேயில்லை. பிரகிருதியின் ரஹஸ்யம் என்னவென்றால், எல்லா நல்ல அம்சங்களும் ஒருங்கே ஒன்றுபட்டு ஒருவனிடம் அமையும்; அதேமாதிரி எல்லா கெட்ட அம்சங்களும் ஒன்றாகச் சேர்ந்து இணை பிரியாமல் வேறு ஒருவனிடம் காணப்படும் என்பதாம். அதாவது, உயர்ந்த அறிவுத் தொகை, உன்னத பரம்பரை, நற்குணங்கள், சிறந்த வித்தை, ஸத்கீர்த்தி, ஸ்னேகஸம்பத்து, அனுகூல தாம்பத்தியம், கலைஞானம், உலக ஐசுவரியம், புத்திர பாக்கியம், ஆகிய இவைகள்யாவும் பொதுவாக ஒன்றுக்கொன்று ஐக்கியப்பட்டுள்ள பண்புகள்; ஆகவே, இவையெல்லாம் ஒருமித்து ஒரு இடத்தில் தழைத்து வளர்கின்றன. இழிவான அறிவுத் தொகையுள்ளவனிடம், நோய், துர் நடத்தை, நீசபரம்பரை, கல்வியில்லாமை, பகை. பொறாமை, காட்டுமிராண்டித்தனம் முதலிய ஸகல துர்க்குணங்களும் கூட்டங்கூடிக்கொண்டு நிரந்தரமாக உறைகின்றன. எனவே, உயர்ந்த அறிவுத்தொகை, வாழ்க்கை வெற்றிக்கும், நல்லொழுக்கப் பழக்கங்களுக்கும், உயர்தரக்கல்விப் பயிற்சிக்கும், அதிகாரப்பதவி நிர்வாகத்திற்கும் உயிர் நாடியாகவும், வற்றாத ஊற்றாகவும் அமைந்துள்ள தென்பது வெளிப்படை யல்லவா?

பிரத்தியேக முறைகள்:

நாகரீக வளர்ச்சிக்கும், கலைவிருத்திக்கும், பொது நிர்வாகத்திற்கும் 140-க்கு மேற்பட்ட ஞானஈவுபடைத்த சிறந்த புத்திமான்கள் அஸ்திவாரங்களாவர். எனவே, கல்விஸ்தாபனங்களில் வித்தியாரம்பத்திலேயே, அறிவுமானிகளைக்கொண்டு உன்னத அறிவுத் தொகையுடையவர்களைக் கண்டுபிடித்து, அவர்களுக்கு, மாமூலுக்குப் புறம்பான, பிரத்தியேக முறையில் கல்வி புகட்டி முன்னுக்குக் கொண்டுவர வேண்டும். உதாரணமாக, மேல் வகுப்புக்கு மாற்றும்போது, அதிகமான மனவயதுடைய சிறுவர்களை இரண்டு வகுப்புக்கள் தாண்டி உயர்த்தலாம்: அதாவது,

5-வதிலிருந்து 7-வதுக்கும், 4-வது பாரத்திலிருந்து 6-வது பாரத்திற்கும் "ப்ரோ மோஷன்" கொடுத்து அவர்களுடைய உயர்ந்த புத்திக்கு ஒத்தப் பயிற்சியும், தக்கத் தூண்டுதலும் அளித்தால்தான் மேலே விருத்தியடைய ஹேதுவாக இருக்கும். 12-வயது பையனுக்கு 15-மன வயதிருந்தால், அவன் அலக்ஷியமாக மெட்ரிகுலேஷன் பரீக்ஷையில் தேறிவிடுகிறான். 15-வயதிற்கு மேற்பட்டவர்களைத்தான் ஸர்வ கலாசாலையில் சேர்த்துக்கொள்ளப்படும் என்றால், மேதாவிச் சிறுவர்கள் 3-வருஷம் விருதா காலக்ஷேபம் செய்வதா? மனமும் தேகமும் இடைவிடாது வேலைசெய்து வந்தால்தான் நேர்மையாக வளர்ந்து பூர்ணபக்குவநிலை அடையும். மந்தர்களிடத்தும், குற்றவாளிகளிடத்தும் ஜனத்தலைவர்களின் கவனத்தைத் திருப்பி, சீர்திருத்த முறைகளை அவலம்பிக்கச் செய்த அறிவுத்தோகை, வயதிற்கு மீறின புத்திசாலித்தனமுள்ள அபூர்வ குழந்தைகளிடத்தும் விசேஷ சிரத்தை செலுத்தி, அவர்களுக்கென்றே பிரத்தியேகப் பயிற்சி ஏற்படுத்தி, அவர்களை முன்னுக்குக் கொண்டுவர, மூலஸாதனமாக விளங்குமென்று எதிர் பார்க்கிறோம்.

<u>மதிப்புரை</u>

பள்ளிக்கூட பரிபாலனம்

இயற்றியவர்: ஸ்ரீ டி. வி. சந்தானகிருஷ்ண நாயுடு, B. A., L. T.,
பிரசுரகர்த்தர்கள்: ஆக்ஸ்பர்ட் யூனிவர்ஸிடி ப்ரேஸ், சென்னை. விலை ரு. 1

இத் தலைப் பெயர் கொண்ட புத்தகமொன்று நமது பார்வைக்கு அளிக்கப்பெற்றது. இதை இயற்றியவர் சென்னை கல்வி இலாகாவைச் சேர்ந்த டி. வி. சந்தான கிருஷ்ண நாயுடு, B A.,L.T., ஆவார். ஆசிரியர் 'பள்ளிக்கூட பரிபாலனம் என்பதென்ன?' என்று தொடங்கி 'கட்டாய ஆரம்பக் கல்வித்திட்ட விதிகள்' ஈறாகப் பல அத்தியாயங்களாகப் பகுத்து ஆரம்ப ஆசிரியர் முதல் நடுத்தர ஆசிரியர் வரையில் இந் நூல் பயன்படுமாறு வரையப் பெற்றுப் பல விஷயங்கள் மிளிர்ந்து விளங்குகின்றது. பலரும் உணருமாறு பெரிய விஷயத்தை எளிய தமிழ் நடையில் எழுதியுள்ளது. ஆசிரியரின் கல்வி வன்மையை நன்கு புலனாக்குகின்றது. வார்தா கல்வியின் நோக்கம், தலைமை ஆசிரியர் ஏனைய ஆசிரியர்களிடத்தில் நடந்து கொள்ள வேண்டிய முறைகள், கல்வி உலகில் தோன்றியுள்ள புது இயக்கங்கள், இவற்றைக் குறித்து எழுதியுள்ளது. ஒவ்வொரு வரையும் சிந்தனைக் கடலில் ஆழ்த்த வல்லது. நகர ஆரம்ப பாடசாலைக்கும், கிராம ஆரம்ப பாடசாலைக்கும் பற்பல பழக்க வழக்கங்களால் வேறுபட்டுத் தோன்றுவது இயற்கையாதலால், பொதுவாக ஆரம்ப பாடசாலை என்று எழுதாமல் கிராம வாழ்க்கைக்கு ஏற்றவாறு கிராம ஆரம்ப பாடசாலைக்கு வேண்டிய சில திட்டங்கள் பகுத்து விளக்கியிருந்தால் இது பொன்மலர் நாற்ற முடைத்தது போலாகும். இவ் விஷயமாய் இப்பொழுது வெளிவந்துள்ள தமிழ் வெளியீடுகளில் இந் நூலே தலைசிறந்து விளங்குவதால் ஒவ்வொரு ஆசிரியரும் வாங்கி படித்தற்குரியது.

—கே. எஸ். சே.

படிப்பின் சில முக்கியமான மூலாம்சங்கள்

T. N. Krishnamurti, M.A., L.T., *Dy. Inspector of Schools, Madras South.*

தற்காலத்திய ஆரம்பப் பள்ளிக்கூடங்களின் முக்கிய கடமைகள் என்ன, அக்கடமைகளை சரிவர நிறைவேற்றுவதற்காக ஏற்பட்ட நிபந்தனைகள் அல்லது கட்டுப்பாடுகள் (Disciplines) என்ன என்பதை நாம் சற்று கவனிக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. இல்லாவிடில், பள்ளிக்கூட நடப்பு, அதன் ஒழுங்கு இவைகள் சம்பந்தமாக ஏற்பட்டிருக்கும் அநேக விதிகள் நமக்குப் பொருள் படுவதில்லை.

முதலாக பள்ளிக்கூடங்களில் "எழுத்து", "படிப்பு", "கணக்கு" முதலிய மூன்று பாடங்கள் கற்பித்தால் போதும், என்ற அபிப்பிராயம் போய், பள்ளிக்கூடத்துக்கு வேறு சில முக்கியமான கடமைகளும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. கேவலம், "எண்ணும், எழுத்தும்" கற்பிக்கும் பள்ளிக்கூடங்களும், அவைகளை நடத்திவரும் உபாத்தியாயர்களும், அவர்களுக்கு ஏற்பட்ட 'தொண்டை' பூர்ணமாக செய்யாதவர்கள் என்றே தற்காலத்தில் கருதப் படுகிறார்கள். தற்காலத்திய ஜனசமூக அமைப்பில், அந்தச் சமூகத்தைச் சார்ந்தவர்களுக் கெல்லாம் சில முக்கிய குணாதிசயங்களும், சில முக்கிய தேர்ச்சிகளும் அவசியமாக வேண்டியிருக்கின்றன. பெற்றோர்களுக்குத் தங்கள் தங்கள் வீடுகளில் இம் மாதிரி தேர்ச்சி கொடுக்க முடியாமலிருக்கிறது. ஆகையால், பெற்றோர்களும் இந்த விஷயங்களில் பள்ளிக்கூடங்களின் உதவியையே எதிர் பார்க்கிறார்கள். ஆகையால், 'எழுத்து,' 'படிப்பு' கற்பிப்பதுடன் கூட சிறுவர்கள் நன்மை பயக்கும் பிரஜைகளாக வளரக்கூடிய ஒரு சுற்றுப்புறத்தை (Environment) உபாத்தியாயர்கள் ஏற்படுத்த வேண்டியது அவசியமாக இருக்கிறது. இச்சுற்றுப்புறம் எப்படிப் பட்டது? இதன் மூலாம்சங்கள் என்ன? இதன் நிர்ப்பந்தங்கள் என்ன? என்பதை நாம் நன்றாகத் தெரிந்து கொள்ள வேண்டும்.

பள்ளிக்கூடச் சுற்றுப்புறமானது ஜனசமூகத்தைப் போன்றதல்ல. குடும்பத்தைப் போன்றதுமல்ல. ஜனசமூகத்தில் ஏற்படக்கூடிய கஷ்டங்களும், வருத்தங்களும், சந்தோஷங்களும் பள்ளிக்கூடச் சுற்றுப் புறத்தில் கிடையாது. குடும்பங்களில் இருக்கக்கூடிய திருப்திகளை நாம் பள்ளிக்கூடங்களில் எதிர்பார்க்க முடியாது. ஆயினும் இச்சுற்றுப் புறத்தில், ஐக்கிய ஊழியங்கள், ஏற்பாடான வாழ்க்கை, ஒருவர்க் கொருவர் அநுதாபம், நல்ல நடத்தை, முதலிய அநேக ஒப்பற்ற குணங்களும் தேர்ச்சிகளும் ஏற்படக்கூடும். இக்குணங்களும், தேர்ச்சிகளும் எவ்வளவு முக்கியமானவை என்பதையும், இவற்றை நாம் நமது சிறுவர்

களுக்குப் பள்ளிக்கூடங்களைத் தவிர இதர இடங்களில் கொடுக்க முடியாது என்பதையும் நாம் சொல்ல வேண்டிய அவசியமில்லை.

இச்சுற்றுப் புறத்தின் முக்கியமான நிபந்தனைகள் என்ன? முதலாவது, இச்சுற்றுப் புறத்திலுள்ளவர்கள் ஓர் ஒழுங்குப்படி நடக்க வேண்டியதாக இருக்கிறது. ஒழுங்கு (**orderliness**) தவறினால் இச் சுற்றுப்புறத்தின் முக்கிய லக்ஷணம் கெட்டு விடுகிறது. குறித்த காலத்தில் பள்ளிக்கூடம் ஆரம்பிப்பதும், குறித்த காலத்தில் உபாத்தி யாயர்களும், பிள்ளைகளும் வகுப்புகளில் வந்து சேருவதும், ஒழுங் காகக் கேட்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பதும், தெரியாத விஷயங் களைத் தெரிந்து கொள்வதும், சப்தமில்லாமல் அவரவர்களுக்குக் கொடுத்த வேலையை அவரவர்கள் செய்வதும், பள்ளிக்கூடம் என்ற சுற்றுப்புரத்தின் முதல் கட்டுப்பாடாகும். இவ்வொழுங்கு (**orderli-ness**) தவறினால் ஓர் முக்கிய அம்சம் போய்விடுகிறது. ஒழுங்கு தவறாமல் மாணவர்களும் உபாத்தியாயர்களும் அவரவர்களுக்கு ஏற்பட்ட கடமைகளை அவரவர்கள் செய்ய, அநேக ஏற்பாடுகளும், விதிகளும் பள்ளிக்கூடங்களில் இருந்து வருகின்றன.

இரண்டாவதாக இச்சுற்றுப் புறத்தைவளம்பெறச் செய்து அதற்கு மேன்மையையும் கௌரவத்தையும் கொடுத்து, பெற்றோர்களுக்கு, இச் சுற்றுப் புறத்திலேயே நமது குழந்தைகள் வளரவேண்டு மென்று மனத்தில் ஓர் ஆர்வத்தைக் கொடுப்பது, 'நல்ல நடத்தை' என்ற மற்றொரு கட்டுப்பாடாம். வயது முதிர்ந்த ஆண்களும் பெண்களும், இளஞ்சிறுவர்களும், சிறுமிகளும் ஒன்று சேரக்கூடிய இச் சுற்றுப் புறத்தைப் பரிசுத்தப் படுத்தி, அதற்கு மேன்மையைக் கொடுத்து, அதை ஒற்றுமைப் படுத்துவது இந்த மூலாம்சமே யாகும். உபாத்தி யாயர்களாயினும் சரி, பிள்ளைகளாயினும் சரி, இந்தக் கட்டுப்பாட்டுக்கு அடங்கி, அதற்குத் தலை குனிந்து நடக்க வேண்டியதவசியமாகும். ஆகையால்தான் பள்ளிக்கூட தண்டனைகள் ஏற்பட்டிருக்கின்றன. ஜன சமூகத்தில் நல்ல நடத்தை யுள்ளவர்களும், நல்ல நடத்தை யில்லா தவர்களும் கலந்து வாழ்ந்து வந்த போதிலும், பள்ளிக்கூட சமூக வாழ்க்கையில் நல்ல நடத்தை யில்லாத உபாத்தியாயர்களுக்கும், பிள்ளைகளுக்கும் இடமே கிடையாது.

மூன்றாவதாக இந்த சமூக வாழ்க்கையில் ஈடுபட்டவர்களெல் லோரும் மற்றொரு கட்டாயத்துக்கு, அடங்கியவர்களாக இருக்க வேண்டும். அதாவது படிப்பு விஷயத்தில் உபாத்தியாயர்களும் பிள்ளை களும் தங்களுடைய முழு சாமர்த்தியத்தையும் முயற்சியையும் உப யோகப் படுத்த வேண்டும். ஊதியத்துக்குத் தகுந்த வேலை என்னும் அபிப்பிராயம் இச்சுற்றுப்புறத்திற் கேற்றதல்ல. நாளைக்காகட்டும் என்ற மனோபாவமும் இச்சுற்றுப்புறத்தின் கொள்கைகளை அனுசரித்த மனோ

பாவமல்ல. உபாத்தியாயர்கள் தங்கள் முழு சாமர்த்தியத்தையும் முழு மனதையும், முழுப் பிரயாசையையும், முழு முயற்சியையும் பள்ளிக்கூட முன்னேற்றத்துக்கும், பிள்ளைகள் முன்னேற்றத்துக்கும், செலவிட முன் வந்தவர்களாக இருத்தல் வேண்டும். இந்த சுற்றுப் புறத்தில் வேலைக்கும் ஊதியத்துக்கும் சம்பந்தம் ஏற்படுத்துவதில் பயனில்லை. தங்களுடைய அனுபோகத்தின் பயனையும், தினந்தோறும் படித்தும், கேட்டும் வளருகிற படிப்பின் பயனையும், தங்களுடைய கஷ்டங்களைப் பாராட்டாமலும், தங்களுடைய தேக சிரமத்தைப் பாராட்டாமலும் கார்மேகங்கள் மழை பொழிவதுபோல் யாதொரு தடையுமின்றி, பிள்ளைகளுக்குக் கொடுக்கக் கூடிய மனோபாவமுள்ளவர்களாக இருத்தல் அவசியம். பிள்ளைகளும் பள்ளிக்கூடத்துக்கு ஆர்வத்துடனும் ஆசையுடனும் சென்று தங்களுடைய 'சக்தி' முழுமையும் படிக்கும் விஷயத்தில் செலுத்துபவர்களாக இருத்தல் அவசியம். இது பள்ளிக்கூட சமூக வாழ்க்கைக்கு இன்றியமையாத ஓர் கட்டுப்பாடு. இக்கட்டுப்பாடு இல்லாவிடில் 'பள்ளிக்கூட வயது' என்ற வார்த்தைக்குப் பொருளில்லாமற் போய்விடும். குறித்த ஓர் காலத்துக்குள் ஓர் வேலை பூர்ணமாகவும், திருப்திகரமாகவும் செய்யப்படுவதற்கு வெகு அவசியமானது, முழு மனதுடன், முழுப் பிரயாசையையும் அவ்வேலையில் செலுத்துவதேயாம். ஆகையால், பள்ளிக்கூடம் என்ற சமூக வாழ்க்கையில் ஏற்பட்டிருக்கும் நிபந்தனைகளில் இது மூன்றாவது மூலாம்சமாகும்.

இதுவரையிலும் எடுத்துக் கூறப்பட்ட, கட்டுப்பாடுகளை ஒட்டியே பள்ளிக்கூடக் 'காரிய விசாரணைகளும்' (administration) 'காரிய நியமிப்பும்' (organisation) ஏற்பட்டிருக்கின்றன. உபாத்தியாயர்களாகிய நமக்கு பள்ளிக்கூட விதிகளும் கட்டுப்பாடுகளும் எதற்காக ஏற்பட்டன என்பதைப் பற்றிய ஓர் தீக்ஷண்யமான அபிப்பிராயமும் அறிவும் ஏற்படவேண்டிய தவசியம். தற்காலத்தில் இந்த நிபந்தனைகள் கவனம் பெறுமல் போவதின் காரணம், நாம் அவைகளையும் பள்ளிக்கூடச் சுற்றுப் புறத்தையும் சம்பந்தப் படுத்தாததேயாம். இவைகளுக்கும் பள்ளிக்கூடச் சமூக வாழ்க்கைக்கும் ஏற்பட்டிருக்கும் சம்பந்தம், உடலுக்கும் உயிருக்கும் ஏற்பட்டிருக்கும் இன்றியமையாத சம்பந்தம் போன்றது என்று நாம் ஞாபகம் வைத்துக் கொண்டோமேயானல் இக்கட்டுப்பாடுகளுக்கு மீறி நடப்பதற்கு நமக்கு மனது வராது. இதற்குத் தொடர்ச்சியாகப் பள்ளிக்கூடக் காரிய நியமிப்பைப் பற்றிய சில முக்கிய குறிப்புகள் எடுத்துக் காட்டப்படும்.

வெண்ணிலா

V. N. Krishnasamy *Asst. Senguntha School, Turaiyur.*

"கண்ணன் மணி வண்ணன்" என்ற மெட்டு.

1. விண்ணதனில் விளையாடும் வெண்ணிலாவே—உன்
விளையாட்டைக் கூறுவாயோ வெண்ணிலாவே.

2. சுய வொளிதான் இல்லையென வெண்ணிலாவே—மக்கள்
சொல்லுவது உண்மைதானா வெண்ணிலாவே.

3. இரவினிலே வரும்போது வெண்ணிலாவே—நீ
இருந்திருந்து மறைவதென்ன வெண்ணிலாவே.

4. இன்பத்தைக் கொடுக்கின்ற வெண்ணிலாவே—உன்னை
இராகு கேது விழுங்குவது உண்மைதானோ.

5. குற்றமற்ற உன்னுடம்பு வெண்ணிலாவே—தினமும்
குறைந்து வளர்வதென்ன வெண்ணிலாவே.

6. குளிர்ச்சியுள்ள உன்னொளியில் வெண்ணிலாவே—திருடர்
கூசுகின்றார் திருடவே தான் வெண்ணிலாவே.

7. பகல்தனிலே எங்கிருப்பாய் வெண்ணிலாவே—அதைப்
பகன்றிடுவாய் என்றனுக்கு வெண்ணிலாவே.

8. பால் போன்ற உன்னொளியை வெண்ணிலாவே—இப்
பாரிலுள்ளோர் விரும்புகின்றார் வெண்ணிலாவே.

9. நக்ஷத்திரக் கூட்டத்தினுள் வெண்ணிலாவே—நடு
நாயகமாய் விளங்குகிறாய் வெண்ணிலாவே.

10. உன்வரவு இல்லாவிட்டால் வெண்ணிலாவே—உலகில்
உற்றிடு மாபத்துக ளநேகம் தானே.

11. உன்றன் உதவியைத்தான் வெண்ணிலாவே—நாங்கள்
என்றென்றும் மறவோமே வெண்ணிலாவே.

(விண்ணதனில் விளையாடும்)

தமிழ்த்தாய் வாழ்க.

சிறுவர் பகுதி

சிறுவர் அறிவுரைத் திரட்டு

A. Rajagopalan, *Teacher, Aduckambarai*

N.B. கீழ்வருஞ் செய்யுட்களை இயன்ற சந்தத்தில் பாடுக.

1. காலையில் எழுவீர் ! கடவுளைத் துதிப்பீர் !!
காலைக் கடன் முடிப்பீர்
வேலன் குச்சியால் பல்லைத் துலக்கி
கோலமுகங் கழுவு வீர்.

2. வீட்டிலுள்ள உணவை நீங்கள்
விருப்பமுடன் உண்டு
நாட்டார் விரும்பும் நலமாங் கல்விச்
சாலை சென் றடைவீர்.

3. ஆங்கு சென்று அனைவ ருடனே
அன்புடை மொழி புகல்வீர்,
பாங்குடன் நீவிர் பாடம் படித்தபின்
பகல்வேளை உணவு கொள்வீர்.

4. யாவரேனும் எழிலுடை நண்பா
என்றே போற்று வரால்
பாவரு மொழியால் வந்தன மவர்க்கே
பரிவுட னளிப்பீர்.

5. சீலந் தன்னை ஞாலந் தன்னில்
சிறப்புட னறிவீர்
கால தாமதம் என்றுந் தீதிதை
கருத்தில் இருத்துவீர்.

6. உண்மைக் கென்று முயர்வுண் டென்று
உறுதியாய்க் கொள்மின்
திண்மை யான பண்பைப் பெற்று
சிறப் புறுவீர் மற்று.

7. பொய்மை யென்றும் புறத்தில் தள்ளி
புரிகுவீர் அறமே
ஐய மிடுவதை வையந் தனி லென்றும்
கைக் கோளாக் கொள்மின்.

8. பொன்றும் உலகம் என்றும் நமக்கு
புரி வதொன் றிலதென்று
நன்றென்றே யறன் என்றுஞ் செய்யின்
நன்மை யெய்தலாமே.

9. இரவல ருடலம் என்றுந் தேயாது
இருப்பதற்கு நீவிர்
என்று மவருடன் இன்மொழி புகன்று
இயன்றவற்றைச் செய்வீர்.

10. இளமையிற் கற்றால் எண்ணிலாப் பேறுகள்
தளர்வுறாமல் நீவிர்
உளவென்ற மனமே நிலையுடைத் தென்று
உறுதியுட னிருப்பீர்.

11. உண்மை உழைப்பை உழைத்தால் நீவிர்
உறுதியுடன் பெறுவீர்
திண்மை யான செல்வம் மதிப்பு
செறிந்திடும் மென்மேலே.

12. பன்னலத் தோடு பாலர்கள் நீவிர்
பாரினில் உயர்ந்திருக்க
பரமனை தினமே அடிபணிந் தொழுகுவீர்
பக்ஷமுடன் தானே.

கடினபதங்களின் பொருள்கள் சில :—கோலமுகம் - அழகுடைய முகம்; பாவரு மொழி - இனிமை பொருந்திய சொல்; சீலம் - ஒழுக்கம்; ஞாலம் - பூமி; ஐயம் - பிச்சை; பொன்றும் - இறந்துபடும்; இரவலர் - யாசிப்போர்; கைக் கோள் - ஒழுக்கம்.

EXTRACTS FROM FORT ST. GEORGE GAZETTE, PART I-B

Amendment to the Madras Educational Rules

(G. O. Ms. No. 1030, Education, dated 3—7—41)

No. 148

In Group II—"Castes other than Scheduled Castes" in Appendix 17-A of the Madras Educational Rules, after item 4, the following entry shall be inserted:—

"4-A. Arya (South Kanara)".

(Gazette dated 15—7—41)

No. 156

Draft amendment to the rules regarding transfer of officers and servants of district boards and the grant of permission to such officers and servants to enter the service of other local bodies.

(G.O. No. 989, Education, 26—6—41)

In sub-rule (3) of rule 1 of the said rules, in the second paragraph the following words shall be omitted, namely:—

"or for slackness of work or misconduct on his part."

(Gazette, dated 22—7—41)

Amendments to the Rules for the working of the Madras Text-Book Committee

(G.O. Ms. No. 1139, Education, dated 22—7—41)

No. 166

The following amendments shall be made to the rules for the working of the Madras Text-Book Committee issued with G. O. No. 1694, Education, dated 2nd September, 1940:—

Amendments

(1) Rule 21 shall be deleted.

(2) The heading of Rules 55 and 56 shall be altered as follows:—

"VIII. Rule regarding Government Officers."

(3) Rule 56 shall be included under the head 'IX. General' and the following substituted for the rule:—

"56 (*a*) No member of the Text-Book Committee shall write, edit or publish any book (s) for use in schools during his membership of the Committee.

(*b*) No book (s) written, edited or published by a member of the Text-Book Committee shall be considered by the Committee during his membership."

(Gazette, dated 29—7—41.)

Amendments to the Madras Educational Rules

(G. O. Ms. No. 1124, Education, dated 21—7—41)

Amendments

No. 168

In Rule 11:—

(*i*) for the words, "District Educational Councils" the words "District Educational Officers and Inspectresses of Girls Schools", shall be substituted, and

(*ii*) for the words, "under section 41 (2) of the Madras Elementary Education Act, 1920," the words, "by Government" shall be substituted.

(Gazette of 29—7—41.)

செய்தித் திரட்டு

(1) பழனி தாலூகா போர்டு ஆரம்ப ஆசிரியர்கள் யூனியன்.

13—7—41 காலையில் மேற்படி யூனியன் மகாசபை ஸ்ரீ. S. பிக்ஷாடீ பாலசுப்ரமணியம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. 89 ஆசிரியர்கள் ஆஜராயிருந்தார்கள். பல தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன. அவைகளில் சில பின்வருபவையாகும்.

ஆரம்ப ஆசிரிய ஆசிரியைகளை அடிக்கடி மாற்றிக் கஷ்டம் விளைவிக்கக்கூடா தென்றும் கோரினவர்களை மட்டும் மாற்றும்படியும், தற்போது வேறு தாலூக்காக்களுக்கு மாற்றப்பட்டிருக்கும் ஆசிரிய ஆசிரியைகளை அவரவர்கள் தாலுக்காக்களுக்கே மாற்றிவிடும்படிக்கும் ஜில்லா போர்டாரை பணிவுடன் கேட்டுக்கொள்ளுகிறது.

26—1—41-ல் நிறைவேறிய 12-வது தீர்மானப்படி லோயர் கிரேட் ஆசிரியர்களுக்கு 1—12—35க்கு முன் வாங்கி வந்து பின் இழந்த தொகையைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டதற்கு ஜில்லா போர்டிலிருந்து "அரசியலாரின் முடிவான உத்தரவு எதிர்பார்க்கப் படுகிறது" என்று பதில் வந்த பிறகு, இது சம்பந்தமாய் சர்க்காரிடமிருந்து சாதகமான உத்திரவுகள் வந்த பிறகும்கூட ஷை தொகைகள் இதுவரை கொடுபடவில்லை. அதை சாங்க்ஷன் செய்து 1—12—35 முதல் பர்சனல் அலவன்சாகக் கொடுக்க வேணுமாய் போர்டாரை கேட்டுக் கொள்ளுகிறது.

ஆரம்ப ஆசிரியர்களுக்கு ஜில்லா போர்டிலிருந்து வரும் மணியார்டர்களை சாக்ஷிகள் முன்னிலையில்தான் கொடுக்கப்படும் என்ற வழக்கத்தை மாற்றி கால தாமதமன்னியில் ஆசிரியர்களுக்கு மணியார்டர் கிடைக்க போஸ்டல் சூப்பரிண்டெண்டை கேட்டுக் கொள்ளுகிறது.

ஆரம்ப ஆசிரியர்களின் நன்மையைக் கோரி நம் ஆரம்ப ஆசிரிய ஆசிரியைகள் யூனியனை தென்னிந்திய ஆசிரிய சங்கத்துடன் இணைத்துக் கொள்ள இம் மகா சபை சம்மதிக்கிறது.

G. O. 416 L. & M. C. dated, 4—2—39-ஐ புனராலோசனை செய்து விரிவுபடுத்தி ஜில்லா யூனியன்களை ஸ்தாபித்துக் கொள்ள அனுமதிக்க மறுமுறையும் கல்வி அதிகாரிகள் மூலம் கவர்ன்மெண்டாரை தாழ்மையுடன் வேண்டிக் கொள்ளுகிறது.

பிற்பகலில் நடந்த கூட்டத்திற்கு ஜில்லா போர்டு தலைவர் ஸ்ரீ. மு பட்டாபிராமையா அவர்கள் தலைமை வகித்தார். அச்சமயம் பழனி ஸ்ரீ. K. R. சுந்தரராஜ அய்யர், M.A.,B.L., அவர்கள் "ஆரம்பக் கல்வி சம்பந்தப்பட்டவர்களின் கடமைகளும் உரிமைகளும்" என்பது பற்றியும், தமிழ் பண்டிதர் ஸ்ரீ. R. S. மயில்சாமி அவர்கள் "தமிழ் கற்பிக்கும் முறை" என்பது பற்றியும், ஸ்ரீ. கிருஷ்ணய்யர் B.A.,L.T., அவர்கள் "ஆரம்ப ஆசிரியர்களின் நிலைமை" என்பது பற்றியும் சொற்பொழிவாற்றினர்கள்.

தலைவர் முடிவுரைக்குப் பின் வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது கலைந்தது.

---

(2) ஒசூர் தாலூக்கா எலிமெண்டெரி பாடசாலை ஆசிரியர் சங்கம், ஒசூர்.

1941-ம் ஸ்ரீ ஜுலை மாதம் 17-ம் தேதி ஒசூர் தாலுக்க ஆரம்பாசிரியர்களின் மூன்றும் வருஷ மகாநாடு ஸ்ரீ. V. நடராஜன் (டி. யி. ஒ., சேலம்) அவர்களின் தலைமையின் கீழ் ஒசூரில் நடைபெற்றது. ஆரம்பாசிரிய உபகரண பொருட் காட்சிசாலையை அவர் அவ்வமயம் திறந்து வைத்தார். ஒசூர் ரேஞ்சு டிபுடி இன்ஸ்பெக்டர் ஸ்ரீமான் A. முனிசாமி நாயுடு அவர்களால் வாசிப்பு பத்திரம், வாசிக்கப்பட்டது. காரியதரிசியால் வருஷாந்திர ரிபோர்டு வாசிக்கப்பட்டது. ஒசூர் பாலர்களால் 'பத்மினி' என்னும் 'ராம்தாஸ்' என்னும் நாடகமும் நடத்திக் காட்டப்பட்டது. ஸ்ரீமதி V. நடராஜனவர்களால் பரிசளிக்கப்பட்டு மகாநாடு முடிவுற்றிற்று.

---

(3) திருச்செங்கோடு தாலூகா எளச்சிபாளையம் ஆரம்ப ஆசிரியர் சங்க ஆண்டுவிழா:

இச் சங்கத்தின் வருஷாந்திரவிழா 19—7—41-ல் திருச்செங்கோடு போர்டு ஹைஸ்கூல் தலைமை ஆசிரியர் ஸ்ரீ. K. சேஷகிரிராவ் B.A., L.T., அவர்களின் தலைமையின்கீழ் நடைபெற்றது. தலைவரால் பொருட் காட்சிசாலை ஒன்று திறந்துவைக்கப்பட்டது.

அடுத்தபடியாக திருச்செங்கோடு போர்டு ஹைஸ்கூல் தமிழாசிரியர் திருவாளர் ப. உலக ஊழியர் அவர்கள் "தமிழ் நூல்களும், ஆரம்ப ஆசிரியர்களும்" என்னும் விஷயத்தைப்பற்றியும், திருச்செங்கோடு ரேஞ்சு டெப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ. T. Regis சாமிகண்ணுபிள்ளை அவர்கள் பொருட் காட்சி சாலையின் உபயோகத்தைப்பற்றியும் விரிவாகப் பேசினார்கள்.

மாணவ, மாணவிகள் பாட்டு, கும்மி, கோலாட்டம் முதலியவைகளை இடை இடையே நடத்தி உற்சாகப்படுத்தினார்கள்.

---

(4) பெரியகுளம் தாலூகா போர்டு ஆரம்ப ஆசிரியர்களின் ஐக்கிய சங்கம், ஆண்டிபட்டி.

26—7—41-ல் இச் சங்கத்தின் மகாசபைக் கூட்டம் ஒன்று சங்கத் தலைவர் ஸ்ரீ. C. S. சுப்பையா அய்யர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இத் தாலுக்காவைச் சேர்ந்த போர்டு பாடசாலை ஆசிரிய ஆசிரியைகளில் பெரும்பாலோர் விஜயம் செய்திருந்தார்கள். பின்வரும் தீர்மானங்கள் ஏக மனதாய் நிறைவேற்றப்பட்டன ;—

1. சர்க்கார் உத்தரவு No. 47860. A, 3, dated 6—7—41-ஐ புனராலோசனை செய்து ஜில்லா யூனியன் ஸ்தாபிக்க உத்தரவு அளிக்கும்படி கல்வி இலாகா அதிகாரிகளைக் கேட்டுக்கொள்ளுகிறது.

2. யுத்தத்தினால் விலைவாசிகள் அதிகரித்திருப்பதனால் ஏழை ஆசிரியர்களுக்கு யுத்த அலவன்ஸ் கொடுக்கும்படி கல்வி அதிகாரிகளையும், ஜில்லா போர்டாரையும் கேட்டுக் கொள்ளுகிறது.

3. ஆரம்ப ஆசிரியர்களின் பிள்ளைகளுக்கு போர்டு ஹைஸ்கூல்களில் இலவசமாகப் படிப்பளிக்கும்படி ஜில்லா போர்டாருக்கு உத்தரவளிக்கும்படி கல்வி இலாகா அதிகாரிகளை கேட்டுக் கொள்ளுகிறது.

4. ஆரம்ப ஆசிரியர்கள் செலுத்தும் பிராவிடெண்டுபண்டு தொகையுடன் ரூபாய்க்கு ஒரு அணா நாலு பை வீதம் சேர்த்து போனஸ் கொடுக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறது.

5. ஒரு நாளைக்கு 6 மணி 20 நிமிஷம் வேலை செய்ய வேண்டி இருப்பதால் வாரத்திற்கு $1\frac{1}{2}$ நாள் விடுமுறையை 2 நாளாகச் செய்யும்படியும், அதற்கேற்றபடி பாடசாலை நாட்களை 220 லிருந்து 200 நாட்காளாக்கும் படிக்கும கல்வி இலாகா அதிகாரிகளைக் கேட்டுக் கொள்ளுகிறது.

6. இந்த யூனியனை மதுரை ஜில்லா ஆசிரியர் சங்கத்துடன் இணைக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள காரியதரிசிக்கு அனுமதி அளிக்கப்பட்டது.

7. வரப்போகும் வருஷாந்தரக் கொண்டாட்டத்தின்போது ஒரு பொருட்காட்சி சாலை திறந்து வைப்பதற்கு வேண்டிய சட்ட திட்டங்களை வகுக்க 7 பேர் அடங்கிய கமிட்டி நியமிக்கப்பட்டது.

8. ஆரம்ப ஆசிரியர்களின் குறைகளை மேல் அதிகாரிகளிடம் நேரில் எடுத்துக்கூறி பரிகாரம் தேடிக்கொள்ள ஒரு தூது கோஷ்டி அனுப்பத் தீர்மானிக்கப்பட்டது.

இன்னும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப் பட்டன.

அக்கிராசனரின் முடிவுரைக்குப் பிறகு வந்தனோபசாரத்துடன் சந்தன தாம்பூலம் வழங்கப்பட்டு கூட்டம் இனிது கலைந்தது.

---

(5) திருச்செந்தூர் தாலுக்கா ஆசிரியர் யூனியன்.

ஷை யூனியனின் இரண்டாவது ஆண்டின் முதல் கூட்டம் தென் திருப்பேரை மாவிடுபண்ணை C. M. S. பாடசாலையில் 12—7—41-ல் ஸ்ரீ ரத்னராஜ் தலைமையில் கூடிற்று. சுமார் 50 உறுப்பினர்கள் விஜயம் செய்திருந்தார்கள். நிர்வாகஸ்தர்கள் தேர்தல் நடைபெற்றது. பிறகு சில தீர்மானங்கள் நிறை வேற்றப் பட்டன.

(6) செல்லம் எய்டட் எலிமெண்டரி ஸ்கூல், ஒரத்தூர், (தஞ்சாவூர் தாலூக்கா)

28—7—41 ல் ஷை பாடசாலையின் பெற்றோர் சங்கக் கூட்டம் நடைபெற்றது. டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ T. S. கல்யாண சுந்தரம் பிள்ளை தலைமை வகித்தார். மாணவ, மாணவிகளால், கும்மி, கோலாட்டம், சம்பாஷணை முதலியன நடந்தது. தலைவர், பாடசாலையில் படிப்பின் அபிவிருத்தியையும், ஆசிரியர்களின் ஊக்கத்தையும், ஆதித்திராவிட மக்கள் பாதிக்குமேல் அதிகம் படிப்பதையும் பற்றி விரிவாகப் பேசினார். இப்பாடசாலைகளில் பெண்கள் அதிகம் படிக்கவேண்டும் என்றும் அதற்குக் கிராமத்தார்கள் அதிக ஊக்கம் காட்டவேண்டுமென்றும் கூறினார்.

29—7—41 ல் ஆசிரிய சங்கத்தின் முதல் ஆண்டு விழா நடைபெற்றது. ஸ்ரீ. T. S. கலியாணசுந்தரம் பிள்ளை தலைமை வகித்தார். இம்மாதிரியான சங்கத்தின் அவசியத்தைப் பற்றியும், இச்சங்கம் ஆசிரியர்களுக்கு எப்படி பயன்படும் என்பது பற்றியும், ஆசிரியர்கள் ஊதியத்தை எதிர்பாராமல் உழைக்கவேண்டும் என்றும் விரிவாகப் பேசினார்.

---

(7) முதியோர் கல்வி தினம்—தூத்துக்குடி

செயிண்ட் ஜோஸப் இன்ஸ்டிட்யூட், ரூரல்செண்டர் மங்களகிரி தொழிற் கல்விசாலை இவைகளின் ஆதரவில் 28-7-41 முதல் 10-8-41 வரை தூத்துக்குடியில் நடந்த ஆறுவது இந்திய கைத்தொழிற் பொருட் காட்சியின்போது 2-8-41-ல் முதியோர் கல்வி தினம் கொண்டாடப் பட்டது. அன்று ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. **Rev. Fr. G. V. Ignatius Sama, S. J.** தலைமை வகித்தார். அவ்வமயம் தென்னிந்திய முதியோர் கல்விச் சங்கத்தின் அக்கிராசனரும், பொருட்காட்சிக்குத் தலைவருமான **Mr. J. L. P. Roche-Victoria,** M.L.A. தன் முகவுரையில் தென்னிந்தியாவில் முதியோர் கல்வி முன்னேற்றத்திற்கு உபகாரியாயிருந்த **Mr S. G. Daniel** B.A. **(M. E. S. Retd.)** அவர்கள் தஞ்சாவூரில் 31—7—41 அன்று காலமானார் என்ற வருந்தத்தக்க சமாசாரத்தைக் கூறினார்.

Rev. Fr. Sama, தன் தலைமையுரையில் தேசம் முழுவதையும் படிக்கத் தெரிந்தவர்களாக இருப்பதினால் உள்ள மகத்தான லாபத்தையும், பொதுஜனக் கல்வியைப்பற்றி விஸ்தாரமாகப் பேசினார். தூத்துக்குடி முனிசிபல் கமிஷனர் ஸ்ரீ **V. N.** சுப்ராய முதலியார் B.A. அவர்கள் தூத்துக்குடி முதியோர் கல்விக் கமிட்டியின் சார்பாக தலைவருக்கு வந்தனோபசாரம் கூற கூட்டம் இனிது கலைந்தது.

பத்திராதிபர் குறிப்புகள்

பெண்கல்வி முன்னேற்றமா ?

சென்றமாதத்தில் குன்னூர் ஆரம்ப ஆசிரியர்களும் ஆரம்பப் பள்ளிக்கூட மானேஜர்களும்கூடிய மகாநாட்டில் நமது கல்வி இலாகா தலைவர் நமது துரைத்தனத்தாரின் ஆரம்பக் கல்விக் கொள்கையை விஸ்தரிக்கும் காலத்து 'பெண்கல்வி மிகவும் முக்கியமென்றும் சிறுமிகளும் சிறுவர்களுடன் பள்ளிக்கூடத்துக்கு செல்வது அவசியமென்றும் சிறுமிகள் எழுதப்படிக்கத் தெரிந்துகொண்டால், அவர்கள் தாய்மார்களாகுங்கால் பாலர்களுக்கு படிப்பு அவசியம் என்பதை நன்குணர்ந்து அவர்கள் படிப்பில் ஊக்கங் கொள்வார்கள் என்றும் சொல்லி, அதனால், பெண்கள் கல்வியைப்பற்றி நமது துரைத்தனத்தார் அதிக ஆர்வம் காண்பிப்பார்கள் என்று அறிவித்தார்' என்று பத்திரிகைகளில் காணப்படுகிறது. பெண்கல்வி எவ்வளவு முக்கியம் என்பதைக் காண்பிப்பதுபோல், பெற்றோர்கள் உதவிக்கு வேண்டுமானால் பிள்ளைகளை வைத்துக் கொள்ளட்டும், பெண்களைப் பள்ளிக்கூடத்திற்கு கட்டாயமாக அனுப்பிவைக்க வேண்டும் என்று வற்புருத்தி பேசியுள்ளார். இக்கொள்கை மிக நல்ல கொள்கையாகும். பெண்கல்வி முன்னேற்ற மடைவது அவசியம். ஆனால், இம்முன்னேற்ற முண்டாவதற்காக சில விதிகளை சில மாதங்களுக்கு முன்பு ஏற்படுத்தியிருப்பதாகத் தெரியவருகிறது. இவ்விதிகளின்படி பிரத்தியேகமான பெண் பாடசாலைகள் இல்லாத இடங்களில், அவ்வட்டாரத்திலுள்ள, பள்ளிக்கூட வயதுள்ள பெண்களின் கணக்கில் 100-க்கு 25 பேர் வீதம், அங்குள்ள பொதுப் பாடசாலைகளில் படிக்காவிட்டால், அப்பாடசாலைக்கு அளித்துள்ள அங்கீகாரம் (Rocognition) நீக்கப்படுமாம். இவ்விதியை அமுலுக்குக் கொண்டுவருவதினால் பல பள்ளிக்கூடங்கள் மூடவேண்டிவரும் எனக் கருதப்படுகிறது. கோயமுத்தூர் ஜில்லாபோர்டு நடத்திவரும் பள்ளிக்கூடங்களில் 200 முதல் 300 பள்ளிக்கூடங்களை மூடும்படியான நிலைவரும் போலிருக்கிறதாம். இதேபோல் ஒவ்வொரு ஜில்லாவிலும் இருக்கக்கூடும். எத்தனை உதவிபெரும் பள்ளிக்கூடங்கள் இவ்விதியால் பாதிக்கப்படுமோ தெரியவில்லை. இவ்விதிக்குக் காரணம் பெண்கல்வி அபிவிர்த்தி யென்பதே

யாகும். ஆனால் ஆண் கல்வியைத் தடைசெய்து பெண் கல்விமுன்னேற்றம் பெற முயலுவது சரியான முறையாகாது என்பது நமது துறைத்தனத்தார் சற்று சிந்திப்பார்களானால் அறியக்கூடும். ஒரு பள்ளிக்கூடத்தை நினைத்தமாத்திரத்தில் மூடிவிடலாம். புதியதாக ஸ்தாபனம் செய்வது மிகவும் கஷ்டமானது. ஆகவே இவ்விஷயத்தில் அதிக அவசரம் இல்லாமல், நிதானமாக ஆழ்ந்தயோசனையின் பேரிலே நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும் என்று நம்புகிறோம்.

11-வது கல்வி வாரம்

தென் இந்திய ஆசிரியர் சங்கத்தின் முயற்சியினால், 2-8-41-ல் கல்வி முன்னேற்றத்தைக் கோரும் பல சங்கங்களின் பிரதிநிதிகள் கூடி, ஒரு மத்திய கல்வி வாரக் கமிட்டி ஸ்தாபிக்கப்பட்டது. இக்கமிட்டி, இவ்வருஷமும் கல்வி வாரம் அனுசரிக்க வேண்டும் என்றும், அக்டோபர் 6 முதல் 12 வரை, கல்வி வாரக்கொண்டாட்டங்கள் நடைபெற வேண்டுமென்றும் தீர்மானித்தது. கல்வியும் புனருத்தாரணமும் (**Education and Post-war reconstruction**) என்னும் விஷயம் இவ்வாரத்தில் ஆங்காங்கு ஆலோசிக்கப்படும். கல்வி வாரத்தின் முக்கிய நோக்கம் கல்வியினால் ஏற்படும் பல பயன்களை ஜனசமூகத்திற்குத் தெரியப்படுத்துவதேயாம். பள்ளிக்கூடங்களில் மாணவர்களுக்கு எவ்வாறு பயிற்சி அளிக்கப்படுகிறது என்பது அநேகருக்குத்தெரியாமலிருக்கக்கூடும். இதையெல்லாம் பெற்றோர்களுக்கு நன்கு விளக்கிக்காட்டும் பொறுப்பை ஆசிரியர்களே வகிக்கவேண்டிய நிலைமையில் நாம் இருக்கின்றோம். எனவே ஒவ்வொரு கிராமத்திலும் கல்வி, வாரத்தை சிறப்புடன் நடத்துவது அவசியமாகும். அடுத்த இதழில் கல்விவாரத்தைப்பற்றிய முழு விவரங்களும் வெளிவரும்.